ரவுலகின் விந்தை

ச. கு. கணபதி ஐயர்



கிராம ஜோதி நூலகம்

மர உலகின் விந்தை

மொழிபெயர்ப்பு நூல்

ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

பதிப்பாசிரியர்
ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.

முன்னுரை
கி. வா. ஜகந்நாதன்

கிராம ஜோதி நூலகம்
சென்னை—28

விலை ரூ. 1/-

முதற் பதிப்பு : ஏப்ரல், 1956

சமர்ப்பணம்

உபவனக் கலை, விவசாயம் முதலியவற்றில் பேரறிஞரும் ஓர் அற்புதமான சிங்காரத் தோட்டத்தின் போஷகரும் பல மொழிப் புலமையும் வேத நெறியிலும் சைவத் துறையிலும் ஆழ்ந்த அபிமானமும் தூய்மையும் குண நலனும் பெற்ற பிட்சாண்டார் கோவில் பண்ணையார் ஸ்ரீ G. ராஜகோபால பிள்ளை, F. R. H. S. அவர்களுக்கு அன்புக் காணிக்கை இது.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

மரம் செடி கொடிகள் இல்லாவிட்டால் நம் வாழ்வே இல்லை; விலங்கினங்களுக்கும் வாழ்வு இல்லை. நமக்கு உணவு தருபவை தாவரங்கள்; உடை தருவனவும் அவையே. நம் வீட்டில் மரங்கள் பலவகையில் பயன்படுகின்றன. வேர் முதல் வித்துவரையில் மருந்தாக உதவுகின்றன. ஆதலின் அவற்றைப்பற்றிய அறிவு நம்முடைய வாழ்வில் துணையாக இருக்கும்.

தமிழ்நாட்டில் பழங்கால மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தது. மரங்களினிடையே வாழ்ந்தவர்கள் தமிழர்கள். தெய்வங்கள் உறையும் இடமாக மரங்களை வழிபட்டனர். தென்னாட்டுத் திருக்கோயில்களில் ஒவ்வொரு தலத்துக்கும் உரியதாக ஒவ்வொரு விருட்சம் உண்டு. அத்தலங்களின் பெயருக்கே மரங்கள் காரணமாக இருக்கும். சிதம்பரத்தின் பழம் பெயராகிய தில்லையென்பது ஒரு மரத்தைச் சார்ந்து எழுந்ததே. மதுரைக்குக் கடம்ப வனம் என்ற பெயர் கடம்ப மரத்தால் வந்தது. திருக்குற்றாலம் ஒருவகை மரத்தினால் வந்த பெயரை உடையதே. திருநெல்வேலி, திருவிடைமருதூர், திருவீழிமிழலை, சாய்க்காடு, மாந்துறை முதலிய திருநாமங்கள் அந்தத் தலங்களின் சிறப்புக்கு மரங்களும் காரணம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

வடமொழியில் மூலிகைகள், மரங்கள் ஆகியவற்றைப் பற்றிய நூல்கள் பல. அவற்றுள் விருட்சாயுர்வேதம் என்ற நூலின் மொழிபெயர்ப்பு இது. வேளாண்மை சம்பந்தமாகவும் தோட்ட சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்து பல நூல்களை எழுதிய நண்பர் ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர், இந்த நூலை மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்.

வற்றைக் கூறுகிறது. அந்த நூலின் **உபவன விநோதம்** என்ற ஒரு பிரிவு அச்சுப் புத்தகமாக எனக்குக் கிடைத்தது. பிருஹத் சம்ஹிதையில் நான் படித்த சில சுலோகங்கள் இந்தத் தொகுப்பு நூலில் காணப்பட்டன. விருக்ஷ சாஸ்திரத்தின் ஒரு பகுதியாகிய நந்தவனங்களைப் பற்றிய செய்திகளும் தாவரங்களின் விநோதங்களுமே இதில் உள்ளன.

இதனை நான் ஆராய்ந்து வரும் காலத்தில் தெலுங்கு லிபியில் விருக்ஷாயுர்வேதம் என்ற வடமொழித் தொகுப்பு நூல் ஒன்று எனக்குக் கிடைத்தது. மரங்களைப் பற்றிப் பல நூல்களில் உள்ள சுலோகங்களைத் தொகுத்து அமைத்த நூல் இது. இந்த நூலும் உபவனத்தைப் பற்றியே விவரிப்பதாகும். உபவன விநோதம் என்ற நூலுக்கும் இதற்கும் பொருளில் அதிக வேற்றுமை காணப்படவில்லை. இந்தச் சமயத்திலேயே சென்னை அடையாறு நூல் நிலையத்தில் விருக்ஷாயுர்வேதம் என்ற கையெழுத்துப் பிரதி ஒன்று இருப்பது தெரிய வந்தது. அதனைப் பார்த்து ஒரு பிரதி எடுத்துக் கொண்டேன். தெலுங்கிலுள்ள அச்சுப் பிரதிக்கும் இதற்கும் அதிக வேற்றுமை இல்லை.

பிறகு நான் விருக்ஷாயுர்வேதம் என்ற பிரதியிலுள்ள சுலோகங்கள் எந்த எந்த நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்றுள்ளன என்று சில அறிஞர்களின் உதவி கொண்டு தேடலானேன். இந்த முயற்சியில் சில இடங்கள் தெரிந்ததுடன் என் கைப்பிரதியிலுள்ள பல சுலோகங்களும் திருத்தம் பெற்றன.

மூல பாடம் திருத்தம் பெற்ற பிறகு மொழிபெயர்ப்பில் ஈடுபட்டேன். சம்ஸ்கிருதத்தில் புலமை நிரம்பிய சில அறிஞரின் உதவியினாலும் தகவல் நூல்கள் சிலவற்றின் துணையினாலும் ஒருவாறு மொழிபெயர்ப்பு நிறைவேறியது. என்றாலும் சில மரங்களின் வடமொழிப் பெயர்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் கிடைக்கவில்லை. அதனால் அவைகளை வடமொழிப் பெயர்களாகவே தந்திருக்கிறேன்.

மரம் செடி கொடிகளின் வளர்ப்பை மட்டும் கூறும் இந்த நூலுக்கு விருக்ஷாயுர்வேதம் என்னும் பரந்து பட்ட பொருளை யுடைய பெயர் பொருந்தாது என்ற கருத்தோடு இந்தப் பதிப் புக்கு 'மர உலகின் விந்தை' என்ற பெயர் சூட்டினேன். இந்த நூலின் பெரும்பாகம் விசித்திர முறைகளையே கூறுவதனாலும் அவைகளே இந்த நூலில் சிறப்பாக இருத்தலாலும் இந்தப் பெயரே ஏற்றது என்பது என் கருத்து. மொழிபெயர்ப்பின் பொருள் பின்னும் விளக்கம் பெறுவதற்குரிய விரிவான பொருள் அகராதி ஒன்றும் என் சொந்த ஆராய்ச்சியும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. மூல பாடம் இந்தப் பதிப்பில் சேர்க்கப்பட வில்லை. அது தனியாக வெளியிடப் பெறும்.

பல ஆண்டுகளாக என் இலக்கிய முயற்சிக்குத் தூண்டுத லும் ஊக்கமும் தந்து வரும் என் அரிய அன்பர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் முன்னுரை அளித்திருப்பது இந்த நூலுக்குப் பெருமை தருகிறது. நியாய வியாகரண வேதாந்த சிரோமணி தமிழ் வித்வான் திருமலை சதுர்வேத சதக்கிரது நாவல் பாக்கம் ஸ்ரீ S. ராமானுஜ தாதாசாரியார், நியாய சிரோமணி தமிழ் வித்வான் ஸ்ரீ V. R. வேங்கட தீக்ஷிதர், வியாகரண சிரோமணி ஸ்ரீ T. ராமாநுஜம் ஐயங்கார், பன்மொழிச் செல்வர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. ஆகிய நண்பர்கள், மொழிபெயர்ப்பின் போதும் இது அச்சாகி வரும் காலத்தும் உடனிருந்து எனக்கு உதவி செய்தார்கள். இவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

—ச. கு. க.

பொருள் அடக்கம்

மர உலகின் விந்தை

மர உலகின் விந்தை

தேவி வாழ்த்து

புராணீம் ப்ரக்ருதிம் வித்யாம்
யாமுசந்தி முநீச்வரா:
ஸாபர்ணு பவதாம் பூத்யை
பூயாதகிலமாத்ருகா.

முனிசிரேஷ்டர்கள் எவளை மூலப்பிரகிருதி என்றும் வித்தியை என்றும் கூறுகின்றனரோ, அனைத்துக்கும் தாயாகிய, உதிர்ந்த இலைகளைக்கூட உணவாக உட்கொள்ளாதவளாகிய அந்தப் பரமேசுவரி உங்களுக்கு நன்மையைக் கொடுப்பவளாக இருக்கட்டும்.

பொருள் விளக்கம்: *சராசரப் பொருள்களைத் தன்னிடமிருந்து தோற்றுவிக்கின்றவள் பிரகிருதி என்னும் தேவி. பிரம்மத்தோடு பிரகிருதி சேர்ந்தால்தான் உலகங்களின் தோற்றமும் செயலும் ஏற்படும். சக்தி அண்ட சராசரங்களைப் படைக்கிருள் என்ற கொள்கைபற்றிச் சக்தியை மூலப் பிரகிருதி என்பர். பிற உயிர்களுக்கு உணவாகப் பயன்படும் தாவரங்களைப் படைத்த பிறகே தேவி மற்ற உயிர்களைப் படைத்தாள். எனவே மற்ற உயிர்களின் தோற்றத்துக்கு ஆதிகாரணம் தாவரங்களே. இந்தக் காரணத்தினுலேதான் தேவியைப்*

பிரகிருதி என்கிறார்கள். விருக்ஷாயுர் வேதமும் வித்தைகளில் ஒன்று. அதனால் கல்வியின் வடிவான தேவியின் வணக்கம் நூலின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அபர்ணா என்பது தேவியின் பெயர்களுள் ஒன்று. தேவி சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெறுவதற்குத் தவம் செய்து வந்த காலத்தில் தாவரங்களிடத்தில் தனக்குள்ள கருணையினால் உதிர்ந்த சருகுகளைக் கூட ஆகாரமாக உட்கொள்ளாமல் இருந்தாள் என்ற காரணத்தால் அவளுக்கு 'அபர்ணா' என்ற பெயர் வந்தது. காளிதாச மகாகவி தமது 'குமார சம்பவத்'தில், "மரத்திலிருந்து தாமாக உதிர்ந்த சருகுகளை உணவாகக்கொள்வது, கடுமையான தவத்தின் மேலெல்லையாகும். அதையும் விடுத்துத் தவமியற்றிய காரணத்தினால், பெரியோர்கள் உமாதேவியை 'அபர்ணா' என்கிறார்கள்" என்று இந்தக் கருத்தை விளக்கியிருக்கிறார். இந்த நூலாசிரியர், தேவியின் இந்தத் திருநாமத்தைக் காப்பில் குறிப்பிட்டதற்கு நோக்கம், மரம் செடி கொடிகளை அழிப்பது பாவம் என்பதைத் தெரிவிப்பதேயாம்.

1. தாவரங்களுக்கு உயிர் உண்டு

[சாதாரணமாக, உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐந்தறிவுயிர் என்று சாஸ்திரங்கள் கூறும். ஓரறிவுயிர்க்கு ஸ்பரிச உணர்ச்சியும், ஈரறிவுயிர்களுக்கு ஸ்பரிசத்தோடு நாவுணர்ச்சியும், மூவறிவுயிர்களுக்கு இந்த இரண்டினோடு மூக்கின் அறிவும், நாலறிவுயிர்களுக்கு இம்மூன்றினோடு கண்ணறிவும், ஐயறிவுயிர்களுக்கு ஐம்புலன்களின் உணர்ச்சிகள் யாவும் உண்டு.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

—தொல்காப்பியம்–மரபியல்.

மரங்கள் ஓரறிவுயிர் என்று வேறு சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த நூல் மரங்களுக்கு ஐம்புலன்களும் பொறிகளும் உண்டென்றும், மனமும் வேலை செய்கின்றது என்றும் சில காரணங்களைக் காட்டிக் கூறுகின்றது. நோய் வகை என்ற அதிகாரத்தில், தாவரங்கள் வாத பித்த சிலேஷ்மங்களுக்கு உட்பட்டவை என்றும் கூறுகிறது. ரிஷிகளுடைய வாக்காகிய இந்தச் செய்தியில் ஓரளவு உண்மை இல்லாமற் போகவில்லை. இந்த அத்தியாயத்தில் உள்ள சுலோகங்கள் வியாச முனிவரின் வாக்கு. வியாச பாரதம், சாந்திபர்வம், அத்தியாயம் 182.]

தேவியைத் துதித்துவிட்டுத் தாவரங்களைப் பற்றிய ஆயுர்வேத நூலை நான் சொல்லத் தொடங்குகிறேன். மரங்களுக்கு உயிர் உண்டு என்ற தீர்மானத்தை முதலில் கூறுகிறேன்.

நான்முகனது படைப்பில் மனிதர்களுக்கு உள்ளன போலவே எல்லாத் தாவரங்களுக்கும் மனமும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் உண்டு. இன்ப துன்பங்களை அநுபவிக்கத்தக்க உடல் உண்டு. அந்த உடல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களாலானது. பிறப்பும் இறப்பும் இயற்கையே. வியாசர் பின்வருமாறு கூறுகிறார்:

1. கடினமாகிய மரங்களுக்கு ஆகாசகுணம்[1] உண்டு. அதனாலேயே அவற்றில் எக்காலத்திலும் பூக்களும் பழங்களும் உண்டாகின்றன.

2. உஷ்ணத்தாலேயே மரங்களில் இலை, பட்டை, பழம், மலர் ஆகியவை வாடிவிடுகின்றன. இலையுதிர்தல், பட்டை கெட்டு விடுதல் ஆகிய மாறுதல்கள் சந்தேகமில்லாமல் மரங்களின் பரிச உணர்ச்சியாலேயே உண்டாகின்றன.

3. காற்றாலும் நெருப்பாலும் இடியோசையாலும் பழங்களும் பூக்களும் சேதமடைகின்றன. அதனால் மரங்களுக்கு ஒலியைக் கேட்கும் சக்தி இருக்கிறது.

---

[1] ஒன்று தோன்றுவதற்கு இடைவெளியைக் கொடுப்பது ஆகாசம்.

4. மணமும் துர்நாற்றமும் உள்ள பல வகைப் புகைகளின் வாயிலாக மரங்கள் நோய் நீங்கி மலர்களை அளிக்கின்றன. அதனால் மரங்களுக்கு மோக்கும் சக்தி இருக்கிறது. அதனால் வாசனையை அறியும் பொறியை மரங்கள் பெற்றிருக்கின்றன.

5. மரங்கள் வேர்களின் வழியாகத் தண்ணீரைக் குடிப்பதாலும், அவை நோயுற்றிருப்பது தெரிவதாலும், நோய்கள் மருந்துகளின் மூலம் நீங்குவதாலும் மரங்களுக்கு நாக்கு என்ற உறுப்பும் இருக்கிறது.

6. இன்ப துன்பங்களை ஏற்பதாலும், வெட்டுப்பட்ட இடம் மறுபடி தளிர்ப்பதாலும், மரங்கள் உயிருள்ளவை என்பதை அறிகிறோம். ஆதலால் மரங்கள் உயிரற்றவை என்பது தவறு.

7. மரங்கள் உயிருள்ளவை; அதனாலேயே அவை உறிஞ்சிய தண்ணீரை நெருப்பும் காற்றும் ஜீரணிக்கச் செய்கின்றன. உட்கொண்ட உணவின் மாற்றத்தாலேயே மரங்களில் ஈரமும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன.

2. மரம் வளர்த்தல்

[மர வளர்ப்பின் அவசியம், முதலில் கூறப் படுகிறது. பிறகு நூலாசிரியர், வீட்டைச் சார்ந்த தோட்டங்களுக்கு ஏற்ற மரங்களையும் ஏலாத மரங் களையும் குறிப்பிடுகிறார். வீடுகளுக்குத் தொலைவில் நந்தவனங்களுக்கும் ஏலாதவை விலக்கப்பட்ட மரங்கள். இவை புறம்போக்கு நிலங்களாகிய படு கைகள், பாதை ஓரங்கள், காடுகள் முதலியவற் றுக்கு ஏற்றவை என்பது கருத்து. இந்த விதி களைக் கவனிப்பதால் எந்தக் காலத்திலும் யாருக் கும் நன்மைகள் உண்டாகும்.]

மர வளர்ப்பின் பெருமை

8. அறத்தையும் பொருளையும் நாடாத பல மைந்தர்கள் இருந்தும் பயன் என்ன? சாலையில் பொது மக்கள் இளைப்பாற உதவும் ஒரு மரம், அந்தப் பயனற்ற மைந்தர்களைக் காட்டிலும் சிறந்தது.

9. படிக்கிணறு ஒன்று, பத்துச் சேந்து கிணறுகளுக்குச் சமம். ஒரு குளம், பத்துப் படிக் கிணறுகளுக்குச் சமம். ஒரு மகன், பத்துக் குளங் களுக்குச் சமம். ஒரு மரம், பத்துப் புத்திரர் களுக்குச் சமம்.

10. ஒருவனுடைய வீட்டில் துளசிச் செடி எத்தனை நாட்கள் இருக்கிறதோ, அத்தனை ஆயி ரம் வருஷங்கள் அவன் வைகுந்தத்தில் பெருமை பெறுவான்.

11. சிவபெருமானுக்கு விருப்பமான வில்வ மரத்தை ஒருவன் நடுவானானால், அவனுடைய

வமிசத்தில் தலைமுறை தலைமுறையாகத் திருமகள் குடியிருப்பாள்.

12. அரசமரம் ஒன்று, வேப்பமரம் ஒன்று, ஆலமரம் ஒன்று, பத்துப் புளியமரங்கள், விளாமரம் மூன்று, வில்வமரம் மூன்று, நெல்லிமரம் மூன்று, மாமரம் ஐந்து ஆகியவற்றை நிருமித்தவன் நரகத்தைப் பார்க்க மாட்டான்.

மரங்களுக்கு ஏற்ற திசைகள்

13. வீட்டுக்குக் கிழக்குத் திக்கில் ஆலமரத்தை நட்டால் எண்ணிய எண்ணம் எல்லாம் நிறைவேறும். தெற்குத் திக்கில் அத்தி மரம் நட்டால் சுபத்தைத் தரும். மேற்கே அரச மரம் நட்டால் மங்களத்தைக் கொடுக்கும்.

14–15. வடக்கே இரளி மரம் (கொன்றை) நட்டால் க்ஷேமத்தைக் கொடுக்கும். இந்த முறையை மாற்றி நடக்கூடாது. அதாவது, கிழக்கில் அரச மரத்தையும், தெற்கில் இரளி மரத்தையும், மேற்கில் ஆல மரத்தையும், வடக்கில் அத்தி மரத்தையும் நடக்கூடாது. வீட்டுக்குத் தெற்கிலும் தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் உத்தியான வனங்களை[1] ஏற்படுத்தக் கூடாது.

16. இந்த முறை தவறினால் கலகத்தையும் தாபத்தையும் துன்பத்தையும் அடைவான். ஆகையால் அரசர்கள் மேற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் நந்தவனங்களை நிருமித்தால் க்ஷேமத்தையும் வமிச விருத்தியையும் பெறுவார்கள்.

---

[1] உத்தியானம், உய்யானம், உபவனம், நந்தவனம் என்பன ஒரு பொருளையே தரும் சொற்களாகும்.

தகுந்த மரங்களும் தகாத மரங்களும்

17. எந்த மரத்தின் நிழலும் வீட்டின்மேல் படக் கூடாது. ஆகையால் பொன்னுலான மரமாக இருந்தாலும் அதை வீட்டு வழியில் நடக் கூடாது.

18. இலந்தை, வாழை, மாதுளை, தூதுமாதுளை[1] இவை வளரும் வீட்டு எஜமானன் விருத்தி அடைய மாட்டான்; க்ஷீணமடைவான்.

19. பலாசம் (புரசு), காஞ்சநாரம் (மரச் சம்பங்கி), நறுவிலி, மருது, புன்கு ஆகிய ஐந்து மரங்களையும் சுகமாக வாழும் மனிதன் தன் வீட்டில் நடக் கூடாது.

20. அவுரி, மஞ்சள் இவற்றை வீட்டுக் கொல்லையில் பயிராக்கியவன் குழந்தைகளையும் சொத்தையும் இழப்பான். "அவை தாமே விளைந்தாலும் களைந்து எறிய வேண்டும்" என்று ரிஷிகள் சொல்லி யிருக்கிறார்கள்.

21. தன் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது முற்றத்திலோ கடுகைத் தெளித்துப் பயிராக்குகிற படுமுட்டாள், எதிரிகளால் அவமதிக்கப்

[1] பீஜபூரகம் என்ற சொல்லுக்கு, வாராக சம்ஹிதையின் பழைய அரும்பதவுரையில் தூதுமாதுளை என்ற பொருள் குறிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இதற்குக் 'கொய்யா மரம்' என்று பொருள் கூறுவாரும் உண்டு. ஆனால், பழங்காலத்தில் நம் நாட்டில் கொய்யா இல்லை என்று சொல்பவர்களின் கூற்றும் ஆராய்ச்சிக்கு உரியது.

பட்டு வெற்றியையும் செல்வங்களையும் இழந்து ஒரு நன்மையும் பெருமற் போவான்.

22. மாதுலுங்கம், மஞ்சள், கண்டகீ, முள் பலாச மரம்[1], வெள்ளைக் காக்கணம்[2], புளியமரம், கழற்கொடி (கச்சக்காய்), அவுரி, மலை அத்தி ஆகிய மரவகைகள் அச்சத்தைக் கொடுப்பவை.

23. இரளி, பலாசம், மலை அத்தி, அழிஞ்சில், பெருங்காய மரம், நறுவிலி மரம், தான்றி மரம் ஆகியவை தாமே முளைத்தால்கூடப் பறித்து எறிந்துவிட வேண்டும்.

24. தோட்டத்தில் கிழக்கே மூங்கில், கறி வேப்பிலை மரம் இவைகளையும், தெற்கில் கருங் காலியையும், மேற்கே நெல்லி மரத்தையும், வடக்கே விளா, இலந்தை மரங்களையும் வைத் தால் சுப பலன்கள் உண்டாகும்.

25. மலர்களும் பழங்களும் இன்ப நுகர்ச் சிக்கு உகந்தவை. பூவாமலும், பழுக்காமலும், நுனியில் இலைகள் அற்றும் நிற்கும் மரங்களையும், பூவாமல் காய்க்கும் மரங்களையும் தோட்டத்தில் விட்டு வைக்கக் கூடாது. அவற்றினுல் தீமை தான் ஏற்படும்.

26. பூத்துக் காய்க்காத எந்த மரத்தையும்— அது அழகானதென்று கொண்டாடப்பட்டா

---

[1] கிஞ்சுகம் என்னும் சொல், முள்முருங்கை என்றும், பலாசம் என்றும் இருபொருள்படும்.

[2] வெள்ளைக் காக்கணம் என்பது, 'கிரிகர்ணிகா' என்றதன் மொழிபெயர்ப்பு. 'வெள்ளைக் கோங்கிலவு' என்பாரும் உண்டு.

லும்-தோட்டத்தில் விட்டு வைக்கக் கூடாது. வீட்டுத் தோட்டத்திலும் வீட்டின் நடுவிலும் உள்ள அந்த மரங்களினால் சொந்தக்காரன் எப்பொழுதும் விருத்தியடைய மாட்டான்.

27. பாலை, வாழை, திராட்சை, அழிஞ்சில், பலா இவற்றை வீட்டுத் தோட்டத்தில் வைத்துப் பயிராக்குகிறவன் ஏழு ஜன்மம் ஆனாலும் துன்பப்படுவான்.

28. பூத்துப் பழுத்துக் குலுங்கும் வேறு பல மரங்களை வைத்து வளர்ப்பவன், நவமணிகளால் அலங்கரிக்கப்பெற்ற ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த புண்ணியத்தை அடைவான்.

முதலில் நட வேண்டிய மரங்கள்

29. ஞாழல் (குப்பைமேனி), அசோகு, சுர புன்னை, வாகை, வேம்பு, சண்பகம் - இவை மங்கலத்தைத் தருபவை. ஆகையால் இவற்றை முதலில் நட வேண்டும். சேமரம் நோயைத் தரும். அதனால் அதை நடக் கூடாது.

30. வேம்பு, அசோகு, புன்னை, வாகை, அழிஞ்சில் இவை மங்களகரமானவை. ஆகையால் இவற்றை உத்தியான வனங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் முதலில் நட வேண்டும்.

3. வனப் பிரதிஷ்டை

[காடுகளால் மழை பெய்து நாடு வளமடை கிறது. காடுகளினுல் வேறு பல பயன்களும் உண்டாகின்றன. பழங்காலத்தில் இந்த நூல் தோன்றியபொழுது நம் நாட்டில் காடுகள் மிகுதி யாக இருந்தன. இருந்தபோதிலும், 'அவை அழிந்து வந்தால் என்ன செய்வது? அழிவுக்கு ஏற்றபடி புதிய காடுகள் தோன்ற வேண்டாமா?' என்ற நோக்கத்துடன் ரிஷிகள் வனப் பிரதிஷ் டையை வற்புறுத்தி யுள்ளார்கள். நூல் எழுது தல், கோவில் கட்டுதல், குளம் வெட்டுதல், குழந்தைகளைப் பெறுதல், வனங்களை நிருமித்தல் முதலியன சந்தானங்கள் எனப்படும். சந்தானங் களுள் ஒன்ருக நம் முன்ஞேர் வனங்களை நிருமித் தலை ஏற்படுத்தியிருப்பது அதன் உயர்வைக் காட்டும். ஒரு வனத்தை ஏற்படுத்துகிறவர் சாஸ்திர முறைப்படி செய்யவேண்டிய கிரியை கள் முதலியவற்றை இந்தப் பகுதி கூறுகிறது. சாதாரணமாகத் தாவரங்களை மரம், செடி, கொடி, புல், பூண்டு என நூல்கள் ஐந்தாக வகைப்படுத்திக் கூறும். ஆனுல் இந்த நூல் கூறும் வகைகள் வேறு (பிரிவு 45—51).

பூவாமல் காய்க்கும் மரமே இல்லை என்பது தற்கால விஞ்ஞானிகளின் கொள்கை. நம் முன் ஞேர்கள் அத்தி, பலா முதலிய மரங்களைப் பூவா மல் காய்ப்பன என்று சொல்லி வந்தார்கள்.]

31. சாஸ்திரத்தில் சொல்லியபடி மரங்களை வைக்காவிட்டால் கவர்ச்சியும் பழவிருத்தியும்

உண்டாகா. ஆகையால், மரங்களை முறைப்படி நடவேண்டிய வகையைச் சாஸ்திர முறைப்படி யான் கூறுகிறேன்.

32. வனப் பிரதிஷ்டை செய்பவர்கள் நல்ல முகூர்த்தத்தில் வெளியில் தெய்வத்தை ஆவாகனம் செய்து பதினாறுவித உபசாரங்களினால் பூசித்து, மரங்களுக்கு மங்களஸ்நானம் செய்வித்து, வஸ்திரம், சந்தனம், புஷ்பம், தூபம், தீபம் இவைகளால் அர்ச்சித்துப் பொன்னாலும் வெள்ளியாலும் பூக்களைச் செய்து அவற்றை மரங்களில் கட்டிக் குழந்தைகளுக்குச் செய்வது போல, (மரங்களுக்குக்)கண்ணை வாங்கிப் பொன் ஊசியால் காது குத்தவேண்டும்.[1] ஓம குண்டத்தில் அக்கினியை முறைப்படியே பிரதிஷ்டை செய்து, ஸௌம்ய சருவை[2] ச்ரபணம் செய்து ஆஜ்ய பாகத்திற்குப்[3] பிறகு 'ஸோமோதேவம்' என்னும் மந்திரத்தைச் சொல்லி, சமித்தாலும் நெய்யாலும் ஆகுதி செய்யவேண்டும். 'ஸ்விஷ்டக்ருதா' என்னும் மந்திரத்தைச் சொல்லி, சமித், நெய், எள் இவற்றைக் கொண்டு நூறு அல்லது ஐம்பது முறை ஓமம் செய்ய வேண்டும். ஓமத்

---

[1] 'கண் வாங்குதல், காது குத்துதல்' என்ற தொடர்களின் பொருள் நன்கு புலனாகவில்லை.

[2] ஸௌம்ய சரு—சந்திரனைத் தெய்வமாக உடைய சரு தேவதை. தண்ணீரோடு கூடிய அட்சதை இது. ச்ரபணம் செய்து—தர்ப்பையினால் களைந்து.

[3] ஆஜ்யபாகம்—பிரதான ஓமத்துக்கு முன் செய்யவேண்டிய கிரியைகள்.

தின் எஞ்சிய பகுதியை முடித்துக்கொண்டு, ஓம குண்டத்தின் அருகில் ஸ்தாபித்த கலச ஜலத்தினுல் எஜமானனுக்குக் குருவைக் கொண்டு அபிஷேகம் செய்விக்க வேண்டும். பின்பு வஸ்திரங்களையும் பணத்தையும் தானம் செய்ய வேண்டும். ஆசிரியன் லக்கின காலம் வந்தவுடன் தானம் கொடுப்பதற்காக எல்லா லட்சணங்களுடனும் கூடிய நல்ல பசு ஒன்றை அலங்கரித்து வனப் பிரதிஷ்டை செய்யும் ஸ்தலத்தின் நடுப் பாகத்தில் வடக்கு முகமாக மேய விட வேண்டும். அன்றுமுதல் நான்குநாள் பிராம்மண போஜனம் முதலிய மஹோத்ஸவங்களை நடத்த வேண்டும்.

33—34. அரசனே! மேலே சொன்ன முறையில் மரங்களை நட்டு வளர்ப்பவன், சகல சித்திகளையும் பரமானந்தத்தையும் பெறுவான். எவன் ஒரு மரத்தையாவது நட்டு வளர்க்கிருனே அவன் விண்ணுலகில் இந்திரனுடைய மூன்று அயுத[1] வருஷங்கள் வசிப்பான்.

35. எவர்கள் தினந்தோறும் பிராம்மணர்களை மகிழ்விக்கிருர்களோ, எவர்கள் தான தருமங்களைச் செய்கிருர்களோ, எவர்கள் தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்கிருர்களோ, எவர்கள் பக்தியினுல் தெய்வங்களைப் பூஜிக்கிருர்களோ அவர்கள் பெறும் மேலான கதியை, மரங்கள் நட்டு வளர்த்தவன் பெறுகிருன்.

---

[1] அயுதம் என்பது, பதினுயிரம் என்ற எண்ணைக் குறிக்கும் சொல்.

மரங்களை நடத் தகுந்த இடம்

36. மரங்களின் நிழல் படாத நீர்நிலைகள் அழகு வாய்ந்தவை. ஆகையால் நீர்நிலைகளின் அருகில் அவற்றின் மீது நிழல் படாமல் நந்த வனங்களை அமைக்க வேண்டும்.[1]

37. விஷக்கற்கள் உள்ள நிலம், புற்றுக்கள் உள்ள நிலம், வெடிப்புகள் உள்ள நிலம், தோஷ முள்ள நீரையுடைய[2] களர் நிலம், பருக்கைக் கற் கள் நிறைந்த நிலம் ஆகியவை மரங்களை நட உதவா.

38. கறுப்புநிற நிலமும், மேலாக நீரூற்றுக் கள் உள்ள நிலமும், பச்சைப் பசேலென்று புல் செழித்த நிலமும் மரங்களை நடத் தகுந்த இட மாகும்.

39. சதுப்பு நிலமாகவோ, மேலாக ஜல ஓட்டம் உள்ள நிலமாகவோ இல்லாமல், நீர்

---

[1] பிருஹத் ஸம்ஹிதை என்னும் நூலில், இந்தச் சுலோகம், 'மரங்களின் நிழல் படாத நீர்நிலைகள் அழகு வாய்ந்தவை அல்ல. ஆகையால் நீர்நிலைகளின் அருகில் அவற்றின்மேல் நிழல் படும்படி நந்தவனங்களை அமைக்க வேண்டும்' என்ற பொருளில் காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலும், கரையிலுள்ள செடிகளின் நிழல் நீர்நிலைகளில் புலப்படும் காட்சி வர்ணிக்கப் பெற்றுள்ளது. நீர்நிலைகளில் மரங்களின் நிழல் படுதல் சுகாதார முறைக்கு ஏற்றதன்று. 'இலைகள் உதிர்ந்து நீர் பாழாதல் கூடாது' என்பர் விஞ்ஞானிகள்.

[2] தோஷமுள்ள நீர் - மரங்களுக்கு விரோதமான சில உப்புகள் கரைந்துள்ள நீர்.

வசதி உள்ள சாதாரண நிலத்தில் மரங்களை நட லாம்.[1] அந்த நிலத்தில் எல்லா மரங்களும் ஐய மின்றி விருத்தியாகும்.

40. பலா, மலை எலுமிச்சை, பனை, மூங்கில், எலுமிச்சை, நாவல், மஞ்சாடி, ஆல், கடம்பு, மா, பேரீச்சை, பாக்கு, வாழை, தினிசம், திராட்சை, தாழை, தென்னை முதலிய மரங்களை ஏராள மாகத் தண்ணீர் வசதி இருக்கும் நிலத்தில் பயி ராக்க வேண்டும்.

41. முருங்கை, வில்வம், ஏழிலைப்பாலை, தான்றி, அசோகு, வன்னி, கருவேல், இலந்தை, மலைக்கற்றாழை, வேம்பு, கடுகுரோகிணி இவற் றை நீர் இல்லாத இடத்தில் நட வேண்டும்.

42–43. நாவல், நீர்வஞ்சி, வானீரம், கடம்பு, அத்தி, மருது, தூதுமாதுளை, திராட்சை, எலு மிச்சை, மாதுளை, அசோகு, புன்கு, மஞ்சாடி, பலா, திமிரம், எரிப்பு மாமரம் ஆகிய பதினாறு மரவகைகளும் ஏராளமாகத் தண்ணீர் வசதி உள்ள இடத்தில் விருத்தியாகும்.

44. தூதுமாதுளை, புன்னை, சம்பங்கி, மா, குருக்கத்தி, பிரியங்கு, மாதுளை முதலிய மரங்கள் சாமானியமாகிய பூமியில் வளரக் கூடியவை.

---

[1] நிலத்தில் ஆறு அடிக்குக் கீழே நீரூற்று இருக்கும் இடம் உத்தமம்; இரண்டு மூன்று அடிக்குக் கீழே ஊற்றுகள் இருந்தால் தாவரங்கள் நீரின் மிகுதியால் பாதிக்கப்படும்; ஆதலால் இந்த நிலம் அதமம். பத்துப் பன்னிரண்டு அடி ஆழத்தில் ஊற்று இருக்கும் நிலம் மத்திமம்.

மர வகை

45. வனஸ்பதி, துருமம், லதை, குல்மம் என்று மரங்கள் நான்கு வகைப்படும். இவை விதைகள், பதியங்கள் (கிளைகள்), கிழங்குகள் என்னும் மூன்று வகைகளில் தோன்றுபவை.

46. பூவாமல் காய்ப்பவை வனஸ்பதி வகையைச் சாரும். பூத்துக் காய்ப்பவை துரும வகையைச் சேர்ந்தவை.

47. கொடிகளாய்ப் படருபவை லதை என்னும் வகையைச் சேர்ந்தவை. பல மெல்லிய கிளைகளால் அடர்ந்து படருபவை குல்மம் (புதர்) என்பவை.

48. நாவல், சண்பகம், புன்னை, நாககேசரம், புளி, விளா, இலந்தை, வில்வம், கும்பகாரி (குங்கிலி மரம்), பிரியங்கு (ஞாழல் மரம்), பலா, மா, இலுப்பை, கறிவேப்பிலை ஆகிய மரங்கள் விதைகளிலிருந்து தோன்றுபவை.

49. வெற்றிலை, நொச்சி, நந்தியாவட்டை முதலியவை பதியங்களிலிருந்து தோன்றுபவை.

50. பாதிரி, மாதுளை, இரளி, அரளி, ஆல், மல்லிகை, அத்தி, முல்லை முதலியவை விதைகளாலோ, கிளைகளாலோ தோன்றுபவை.

51. குங்குமப்பூ, வெள்ளைப்பூண்டு, இஞ்சி, கருணைக்கிழங்கு ஆகியவை கிழங்குகளிலிருந்து தோன்றுபவை. ஏலம், தாமரை, குவளை முதலியவை கிழங்குகளாலோ, விதைகளாலோ தோன்றுபவை.

4. மரம் நடும் முறை

[தாவரங்களின் வளர்ச்சிக்கு நைட்டிரஜன் (Nitrogen) என்னும் காலகச்சத்து அவசியம். இவற்றை எருக்களின் மூலம் தாவரங்களுக்கு நாம் தருகிறோம். இரட்டைப் பருப்புத் தாவரங்களாகிய எள், உளுந்து, பயறு, அவரை, மொச்சை, கடலை, கொள் முதலியன ஆகாயத்திலிருந்து நைட்டிரஜனைக்கிரகித்து வேர்களில் சேமித்து வைக்கின்றன. இவற்றின் வேர்களில் நைட்டிரஜன் இருப்பதனால் அவை சிறுசிறு முடிச்சுக்களாகத் தோன்றும். தாவரங்களுக்காக நிலத்தில் நாம் இடும் நைட்டிரஜன் சத்துக்களை இந்த இரட்டைப் பருப்புச் செடிகள் உட்கொள்வதில்லை. தாவரங்களுக்கு முக்கியமான உணவாகிய நைட்டிரஜனை வேர்களில் சேமித்து வைக்கும் தாவரங்கள் ஆங்கிலத்தில் லெகும்ஸ் (Legumes) எனப்படும். நைட்டிரஜனைத் தேடித்தரும் செடி கொடிகளை ஒரு நிலத்தில் பயிர் செய்து அவை ஓரளவு வளர்ந்தபின் அவை அப்படியே நிலத்தில் மட்கும்படி மடக்கி உழுது, உழுத நிலத்தில் ஒருவர் தமக்கு விருப்பமான தாவரங்களைப் பயிர் செய்து கொள்க என்று இக்கால விஞ்ஞானிகள் கூறுவர். அப்படிப் பயிர் செய்ய முடியாத போது அவற்றை வேறிடத்திலிருந்து பறித்து வந்து தழை உரமாக இடவேண்டும் என்பர்.

இந்த நூல் இந்த இரண்டினையும் வற்புறுத்துகின்றது. வனப்பிரதிஷ்டைக்குரிய நிலத்தில் தொடக்கத்தில் எள்ளையும் உளுந்தையும் பயிர் செய்து மடக்கி உழுதலைக் கூறுகிறது (பிரிவு 53).

தழை உரத்தைச் செடிகளுக்கு இடுவதற்குப் பதிலாக இரட்டைப் பருப்புத் தானியங்களையே கஷாயமாக்கி ஊற்றுவதை இந்நூல் மேல் அத்தியாயங்களில் வற்புறுத்துகின்றது.

நோய்கள் அண்டாமல் இருக்கவும் விரைவில் முளைத்துப் பலன்தரவும் நடுகைக்கு முன் விதைகளுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகள், விதைக்கும்போது செய்ய வேண்டிய சடங்குகள், விதைத்த பின் பாத்திகளுக்குச் செய்யத்தக்கவை முதலியவற்றை இந்தப் பகுதி விவரிக்கின்றது.

வனமகோற்சவத்தில் மரங்களை முதலில் எவரேனும் ஒரு பெரியார் தலைமை ஏற்று நடுவது இந்தக் கால மரபு. மரத்தை முதலில் அந்த இடத்தின் சொந்தக்காரரே நட வேண்டும் என்று இந்த நூல் கூறுகிறது.

நமது பழைய கொள்கையாகிய மரங்களுக்குத் தோண்டும் குழி விவரமும் இடைவெளி விவரமும் இக்கால விஞ்ஞான முறைகளோடு ஒத்திருக்கின்றன.

சுலோகங்கள் 78 முதல் 80 முடிய நோய் வகைகளைக் குறிப்பன. ஆகவே நோய் வகை என்ற தலைப்பின் கீழ் அமைந்திருப்பின் பின்னும் விளக்கம் பெற்றிருக்கும்.]

52. மிருதுவான நிலம் மரம் நடுவதற்குத் தகுந்தது. அந்த நிலத்தில் முதலில் எள்ளைத் தெளித்துச் செடிகள் நன்றாய்ப் பூத்தபின் பூமியை மடக்கி உழவேண்டும். முதலில் செய்ய வேண்டிய செயல் இதுவே.

53. நன்ருக உழுது பண்படுத்திய நிலத்தில் உளுந்தையும் எள்ளையும் தெளித்து அவை பூத்துக் காய்த்தபின் அவற்றைப் பிடுங்கிவிட்டுப் பிறகு விரும்பிய விதைகளை நட வேண்டும்.

விதைகளுக்குச் சிகிச்சை

54. உரிய பருவத்தில் பழுத்துக் காய்ந்த (பக்குவமடைந்த) விதைகளைப் பாலில் நனைத்து ஐந்து நாட்கள் உலரவைத்துப் பிறகு வாயு விளங்கத்தையும் நெய்யையும் கலந்து தூபம் போட்டுப் பிறகு நட வேண்டும்.

55. மேலே சொல்லியபடி பாலில் நனைத்து ஐந்து நாட்கள் காய்ந்த விதைகளுக்கு, கண்டங்கத்திரி, எள், நெய் இவற்றைக் கலந்த தூபம் ஏற்றி நட்டால் சீக்கிரம் முளைக்கும். மேலே சொன்ன முறையில் பாலில் நனைத்து உலர்ந்த விதைகளைப் பசுஞ்சாணத்தால் மர்த்தித்து வசம்புப் புகையேற்றிஞல் சீக்கிரம் வளரும்.

56. விதைகளைப் பாலில் நனைத்துப் பசுஞ்சாணத்தில் வைத்துப் பிறகு உலர்த்தி வாயு விளங்கத் தூளையும் தேனையும் கலந்து பிசைந்து நட்டால் (விரைவில்) வளரும்.

57. நாவல், பலா, மா, தேவதாரு, எலுமிச்சை இவற்றின் விதைகளைப் பாலில் நனைத்து நெய், பசுஞ்சாணம், வாயுவிளங்கத் தூள் இவற்றைக் கலந்து பிசைந்து நட வேண்டும்.

58–59. பலா, அசோகு, வாழை, நாவல், எலுமிச்சை, மாதுளை, இரளி, நெல்லி, தூது

மாதுளை, குருக்கத்தி இவைகளைக் கிழங்கோடு அல்லது வேரோடு, அல்லது பதியமாக நடும் போது பசுஞ்சாணத்தை அப்பி நட வேண்டும்.

60. ஓரிடம் விட்டு மாற்றி நடும்போது, அடிக்கிழங்குக்காயினும் சரி, வேருக்காயினும் சரி, நெய், வெட்டிவேர்த் தூள், எள்ளுத்தூள், தேன், வாயுவிளங்கத் தூள், பசும்பால், சாணம் இவற்றைக் கலந்து தடவி நட வேண்டும்.

61. உரிய காலத்தில் பழுத்த பழங்களை நாமே பறித்து நன்றாக உலர்த்திப் பாலில் நனைத்து ஐந்து நாட்கள் வெயிலில் வைக்க வேண்டும்.

62–64. விதைகளுக்கு வாயுவிளங்கக் கஷாயமும் நெய்யும் சேர்த்துப் புகையிட்டு, சமூலமாகச் சுட்ட சாம்பலையும் அழுகுரல் பறவையான குரரியின் மலத்தைச் சுட்ட சாம்பலையும் பாலில் கலந்து விதைகளின்மேல் தடவிப் பின் ஐந்து நாட்கள் வெயிலில் உலர்த்திப் பிறகு பசுஞ் சாணம், பசு மூத்திரம் இவற்றில் பிசைந்து ஒவ்வொரு நாள் ஊறவைத்தபின் நட்டால் சீக்கிரம் வளரும். வாயுவிளங்கக் கஷாயமும் தேனும் சேர்த்து விதைகளின்மேல் தடவி நட்டால் சீக்கிரம் முளைக்கும். உலர்ந்த விதைகளைப் பசுஞ் சாணத்தால் அப்பி நட்டால் நன்றாய் வளரும்.

65. விதைகள் நட்ட இடத்தை வைக்கோலால் மூடிப் பாலையும் தண்ணீரையும் கலந்து தெளித்துக்கொண்டு இருக்கவேண்டும். விதைகள் முளைத்தபின் வைக்கோலை அப்புறப்படுத்தி வெயில் படும்படி செய்ய வேண்டும்.

66. விடியற்காலையில் ஸ்நானம் செய்து சுத்தமாய் உபவாசத்துடன், மங்கள வாத்தியங்கள் முழங்க, விதைகள் அல்லது செடிகள் நடும் பிரதேசங்களுக்கும் புண்ணியாகவாசனம் செய்ய வேண்டும். விதைகள் அல்லது செடிகளுக்கு நடுமுன் பொன்பட்ட ஜலத்தால் நீராட்ட வேண்டும்.

67–69. ஸ்நானம் செய்து பரிசுத்தனாய் வெளுத்த வஸ்திரங்களை உடுத்து, தெய்வங்களுக்கும் குருவுக்கும் வாஸ்து புருஷனுக்கும் வணக்கம்செய்து குணவானாகிய பிராம்மணனுக்குப் பொன்னையோ பூமியையோ தானம் செய்து முதலில் எஜமானன் விதைகளையோ செடிகளையோ நட வேண்டும்.

விதைகள் நடும்போது, 'ஓம் விச்வே மஹிதே நமோ பகவதி நம:' என்னும் மந்திரத்தால் பூமி தேவியைத் துதிக்கவேண்டும். 'வசுதேவி பவேத' 'புண்யதேவிவனு' என்னும் மந்திரத்தை முதலில் வணங்கிப் பின் சொல்லி ஜபித்தால், மரங்கள் வளர்ச்சி பெறும்.

70. 'சசாங்கர', 'இந்த்ர இஹ', 'திரியம் பக' என்னும் மந்திரங்களைச் சொல்லி ஜபித்த விதைகளை நட்டால் நல்ல பலனுடன் மங்களத்தைக் கொடுக்கும்.

குழி வெட்டுதல் முதலியவை

71. நாற்பத்தெட்டு அங்குல ஆழமும் அவ்வளவே சதுரமும் உள்ள பள்ளம் தோண்டி

அதிலிருந்து மண்ணை அப்புறப்படுத்தி அதற்குப் பதில் மெத்தென்ற மணலைக் கொட்டி, செடிகளின் வேரைத் தண்ணீரில் நனைத்து நட வேண்டும்.

72. செடிகளை நடும்போது ஒன்றுக்கு ஒன்று இடைவெளி விடுவதில் 20 முழம் இருப்பது உத்தமம்; 16 முழம் விடுவது மத்திமம்; 12 முழம் இருப்பது அதமம் என்று அறிக.

73. மேலே சொன்ன அளவு இடைவெளி விடாமல் செடிகளை நட்டால் அவற்றின் வேர்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு பீடிக்கப்பட்டு நல்ல பயனைக் கொடுக்க மாட்டா.

மரம் நடத் தகுந்த நட்சத்திரங்கள்

74. துருவ நட்சத்திரங்கள் எனப்படும் ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதிகளும், மிருது நட்சத்திரங்கள் எனப்படும் சித்திரை, ரேவதி, மிருகசீர்ஷம், அனுஷம் ஆகியவைகளும், மூலம், விசாகம், பூசம், திருவோணம், அசுவினி, ஹஸ்தம் ஆகியவையும் செடிகளை நடச் சிறந்த நட்சத்திரங்களென்று முக்காலம் உணர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மரங்களைக் காக்க மந்திரம்

75. ‘ஓம் ஸ்வஸ்தி கிஷ்கிந்தாஸ்தித ப்ரகட பராக்ரமாந்தர்ஹித அர்க்க மண்டலோபஜீவிதஸ் ஸச ஸ்ரீ ஹநூமான் ஆஜ்ஞாபயதி மூஷக

பதங்க பிபீலிகாதீன் விநாசயதி' என்பது மரங்களைக் காக்கும் மந்திரம்.

76. விட்டில், எலி, பறவை, எறும்பு முதலிய ஜந்துக்களால் பயம் ஏற்பட்ட போது இம்மந்திரத்தை 108 முறை ஜபித்துச் செடிகளிலும் மந்திரத்தை எழுத வேண்டும்.

77. இம்மந்திரத்தை ஓலையில் எழுதி 108 முறை ஜபித்து அந்த ஓலையைச் செடியின் அடியில் புதைத்துவிட்டால், விட்டில், புழு பூச்சிகள், எலி, எறும்பு முதலியவை அழிந்துவிடும்.

78. பனியாலும், அதிகக் காற்றாலும், புகையாலும், தீயாலும், பறவைகளாலும் மரங்களுக்கு ஏற்படும் அழிவை முயன்று தடுக்க வேண்டும்.

79. இடி விழுந்து பட்ட மரத்தின் சாம்பலைக் கொண்டு வந்து தெளித்தால் பனியால் ஏற்பட்ட வறட்சி நீங்கும். (காட்டுத் தீயால் எரிந்த மரச்சாம்பலையும் உபயோகிக்கலாம்.)

80. வெள்ளை வெளேரென்றிருக்கும் சோற்றில் தயிரையும் உப்பையும் கலந்து பிசைந்து செடிகளுக்குத் தெளித்தால் மனிதர் கண் பட்ட குற்றம் நீங்கும்.

நடும் காலம்

81. ஆடி, ஆவணி மாதங்கள், விதைகள் நடவும் செடிகள் நடவும் சிறந்தவை. கோடைக் காலத்தில் தவிர மற்றப் பருவங்களில் கொடிகள் நடலாமென்று சிலர் சொல்லுவார்கள்.

82. மாசி, பங்குனி மாதங்களில் கிளைவிடாத செடிகளை நட வேண்டும். மார்கழி, தை மாதங்களில் கிளை பிரியும் நாற்றுக்களை நட வேண்டும். ஆவணி, புரட்டாசி மாதங்களில் மரங்களாகும் செடிகளை நட வேண்டும்.

5. நீர் ஊற்றுதல்

[நீர் எருக்களைச் செடிகளுக்கு இந்த ஆசிரியர் வற்புறுத்துகிறார். இந்த விஷயத்தை எருவிடுதல் என்னும் தலைப்பில் கூறாமல் இங்கே விளக்குவது, நீர் எருவைச் செடிகளுக்கு ஊற்றும் போது பிரத்தியேகமாக அவைகளுக்கு ஜலம் வேண்டுவதில்லை என்பதற்காகவே.

குணப ஜலம் என்று ஒருவகைக் கஷாயம் இங்கே கூறப்படுகிறது. இங்கே அல்லாமல் எருவிடுதலிலும் நோய் வகையிலும் விவரிக்கப்படுகிறது. இதனால் தாவரங்களுக்குக் குணப ஜலம் பல வகைகளில் அவசியம் என்பது புலனாகிறது.]

83–84. கோடைக்காலத்தில் தினந்தோறும் காலை மாலைகளில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். மழைக் காலமாகிய ஆவணி, புரட்டாசி மாதங்களில் நிலத்தில் ஒதம் தட்டாவிட்டால் நாளுக்கு ஒரு முறை தண்ணீர் ஊற்ற வேண்டும். மற்றச் சமயங்களில் அவசியமான அளவு தண்ணீரை ஊற்ற வேண்டும். ஆனால் செடிகளுக்கு ஊற்றும் தண்ணீர் எப்பொழுதும் சுத்தமாய் இருக்க வேண்டும். புதிதாக நட்ட செடிகள் எல்லாவற்றிற்கும் தினந்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

குணப ஜலம் ஊற்றுதல்

85–90. மான், பன்றி, மீன், செம்மறியாடு, சண்டைக்கிடா, காண்டாமிருகம் இவற்றி

னுடைய மாமிசங்களைக் கிடைத்த அளவு கொண்டுவந்து அவற்றை ஒரு சட்டியில் இட்டுத் தண்ணீர் ஊற்றி மட்க வைக்க வேண்டும். புதிய உளுந்து, எள்ளு இவற்றைப் பொடி செய்து அத்துடன் கலக்க வேண்டும். பாலும் தேனும் பிறகு கொஞ்சம் வெந்நீரும் அத்துடன் கலந்து வெயிலிலோ, சூடுள்ள இடத்திலோ, அந்தச் சட்டியைப் பதினைந்து தினங்கள் வைத்திருக்க வேண்டும். பின்பு இந்தத் தண்ணீரைச் செடி களுக்கு ஊற்றினுல் செழிப்பாக வளரும். புத்தி மான்கள் இதைக் 'குணப ஜலம்' என்கிருர்கள். செடிகள், மரங்கள் இவை பலனைக் கொடுக்கும் தறுவாயில் கொள்ளு, உளுந்து, பயறு, பார்லி, எள் இவற்றைச் சேர்த்துக் கஷாயம் செய்து ஆற்றிச் செடிகளுக்கு வார்த்தால் நல்ல பழங் களைக் கொடுக்கும். மரங்களும் செழிக்கும்.

6. நோயும் பரிகாரமும்

[நோய்களுக்கு இக்கால விஞ்ஞான நூல்கள் கூறும் முறை இந்த நூலில் கூறும் முறைகளோடு ஒத்திருக்கவில்லை. இந்தப் பழைய முறைகளும் சிறந்தனவே. பெண்களைக் கொண்டு 'தோகதம் கொடுத்தல்' என்னும் செய்தி வடமொழிக் காவியங்களிலும் தமிழ் நூல்களிலும் நிகண்டுகளிலும் காணப்படுகிறது. இன்ன மரம் மகளிரின் இன்ன இயல்பினுல் மலரும் என்பது மட்டும் நூல்தோறும் வேறுபட்டுக் காண்கிறது. சூடாமணி நிகண்டு கூறுகிறது.

'ஏடவிழ் மகிழ் சுவைக்க
    எழிற்பாலை நண்பு கூடப்
பாடலம் நிந்திக் கத்தேம்
    படிமுல்லை நகைக்கப் புன்னை
ஆடநீள் குராஅ ணைக்க
    அசோகுதைத் திடவா சந்தி
பாடமா பார்க்க வார்சண்
    பகம்நிழற் படத்த ளிர்க்கும்.'

இந்தப் பகுதியிலுள்ள சில சுலோகங்கள் 'விசித்திர முறைகள்' *என்ற அத்தியாயத்தில் கூற வேண்டியவை. இங்கே இவை வந்த காரணம் விளங்கவில்லை.]*

91. *மனிதர்களுக்கு நோய் நொடி உண்டாவது போல் மரங்களுக்கும் உண்டு. வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பவை அவற்றுக்கும் உண்டு. அவற்றை நீக்க வேண்டும். அவ்விஷயங்களைத் தெளிவாக்குவோம்.*

92. புழுக்கள் அரித்திருந்தாலும், நெருப்பால் தீய்ந்து விட்டாலும், காற்ருல் முறிந்தாலும், இடியால் எரிந்து விட்டாலும், ஆயுதங்களால் வெட்டுப்பட்டாலும் அவற்றுக்குத் தனித்தனியே சிகிச்சை உண்டு.

93. மரம் மெலிதல், மிகநீளல், குறுகுதல், பருத்தல், கடினமாதல், தூங்காமல் இருத்தல், மரங்கள் சற்று வெயில் பட்டவுடன் வாடுதல் ஆகிய குணங்களை உடைய மரம் வாத இயற்கை யுள்ளதாய்ப் பழங்களையும் பூக்களையும் கொடுக்காது.

94. வெயிலைத் தாங்கும் சக்தி இன்மை, வெளுத்தல், கிளைகள் பலமுறை ஒடிதல், அகாலத்தில் பூத்துக் காய்த்தல் ஆகிய தன்மைகளைப் பெற்ற மரங்கள் பித்த இயற்கை வாய்ந்தவை.

95. நெருங்கிய கிளைகளையும் இலைகளையும் கொண்டு, ஏராளமாகப் பூக்களையும் பழங்களையும் உடையதாய், கொடிகள் சூழ்ந்து, சுற்றிலும் ஈரங் கசிந்துகொண்டிருக்கும் மரம் சிலேஷ்மத் தன்மை பெற்றது.

சிகிச்சை

96. காரமும் புளிப்பும் உள்ள கஷாயத்தை வாத நோய் உள்ள மரத்துக்கு ஊற்றினல் நோய் நீங்கும். காரம், உப்பு, புளிப்பு உள்ள கஷாயத்தைக் கை பொறுக்கும் சூட்டில் மரத்துக்கு ஊற்றினல் பித்த நோய் நீங்கும். தித்திப்பு, புளிப்பு, உப்பு உள்ள கஷாயத்தைக் குழம்பு

போல் கெட்டியாய் ஊற்றினால் சிலேஷ்ம நோய் மரத்தை விட்டு அகலும்.

97. குழம்பு போல் கெட்டியான மாமிச ரசங்களை மரத்துக்கு ஊற்றினால் வாத நோய் தீரும். மிகக் குழம்பாகவும் தித்திப்பாகவும் உள்ள குளிர்ந்த நீரை வார்த்தால் பித்தம் நீங்கும். காரமும் புளிப்பும் உள்ள கஷாயத்தை வெது வெதுப்பான சூட்டோடு ஊற்றினால் மரத்தின் சிலேஷ்ம குணம் நீங்கும்.

98. ஒரு மரத்துக்கு வாத, பித்த, சிலேஷ்ம நோய்கள் இல்லாவிட்டாலும், தளிர்களும் பூக் களும் வாடினாலும், விகாரப்பட்டாலும் அந்த மரத்தின் வேரில் புழுக்கள் இருப்பதாக அறிந்து கொள்ள வேண்டும். உடனே புழுக்களை நீக்கி விட்டுப் பசு மூத்திரம், நெய், வாயுவிளங்கம், கடுகு, எள் அல்லது எள்ளுப் பிண்ணாக்கு இவற்றையெல்லாம் சேர்த்து நனைத்து, தூபத் திரவியங்களால்[1] புகையிட வேண்டும். இப்படிச் செய்தால் மரம் குற்றம் நீங்கி வளரும்.

99. புன்கம் விதைகள், கொன்றை விதை கள், வெள்ளுள்ளி, ஏழிலைப்பாலைப் பட்டைகள், கோரைக் கிழங்கு, வாயுவிளங்கம் இவற்றைச் சேர்த்து அரைத்துப் பசு மூத்திரத்தில் கலந்து மரத்தின் வேரில் தடவினால் புழு பூச்சிகள் இறந்துவிடும்.

---

[1]. சாம்பிராணி, மட்டிப்பால், குங்கிலியம், சந்தனம், அகில்கட்டைகளின் தூள் முதலியவை தூபத் திரவியங்களாகும்.

100. முன் சொன்ன குணப ஜலத்தையும் பாலையும் செடி அல்லது மரத்தின் வேரின் மேல் ஊற்றித் தாமரைக் கிழங்கு ரசத்தை மரத்தின் மேலெல்லாம் தடவினால் எரிந்த மரங்கூட முன் போல் பசேலென்று கிளைத்துச் செழிக்கும்.

101. இரளி, எருக்கு, அத்தி இவற்றின் பட்டைகளை அரைத்து நெய், சாராயம், தேன், பால் இவற்றையும் கலந்து மரத்தின் மேல் முழுவதும் தடவி வேறு மரங்களை ஆதாரமாகச் சேர்த்துக் கட்டி, இரளி மரத்தின் வேர் மண் ணைக் கொணர்ந்து இம்மரத்தின் வேரைச் சுற்றி அடைத்து முதலில் பாலும் பின்பு தண்ணீரும் ஊற்றினால், காற்றினால் சாய்ந்த மரம் பழைய படி தளிர்த்து நல்ல பலனைக் கொடுக்கும்.

இடியால் பட்ட மரத்துக்கு மருந்து

102–103. கோரைக்கிழங்கு, வெட்டி வேர், இலுப்பை வேர், பயறு, உளுந்து, பார்லி, எள் இவற்றை யெல்லாம் மாவாக்கிப் பாலும் தண் ணீரும் கலந்து குழப்பி மரம் பூராவும் நனைத் துக்கொண் டிருந்தால் அந்த மரம் முன்போல் பூத்துக் காய்த்துச் செழிக்கும்.

104. சில மரங்கள் சிறிது காலம் பூத்துக் காய்த்தபின் சீக்கிரத்திலேயே கிழமாய் விடும். அவற்றுக்குக் குணபஜலமும் பாலும் கலந்து ஊற்றினால் பழையபடி பூத்துக் காய்க்கும்.

105. தண்ணீர் அதிகமாக ஊற்றியதாலோ, ஊற்றாமல் விட்டதாலோ, மரத்துக்கு நோய்

வரும். இலைகள் காய்ந்து விடும். பழங்கள் உதிர்ந்து விடும். இந்த மரத்துக்கு உடனே நெய், பால் இவற்றோடு, வாயுவிளங்கப் பொடியைச் சேர்த்து ஏழு நாட்கள் எருவிட வேண்டும்.

106. இலைகள் சுருங்குதல், மீன் நாற்றம் அடித்தல், இலைகள் உதிர்தல், எறும்புகள் மொய்த்தல், பட்டை கழலுதல் இவையெல்லாம் தண்ணீர் அதிகமாய் ஊற்றியதால் ஏற்பட்ட அஜீர்ண ரோகம். இதற்குச் சிகிச்சை செய்ய வேண்டும்.

107. இந்த அஜீர்ண நோய் கண்ட மரத்தின் அடிப் பாகத்தைக் கோடரியால் வெட்டி (சுரண்டி), அதில் இருக்கும் துர்நீரை வடிய விட்டபின் தேன், நெய், வாயுவிளங்கம், எள் இவற்றை அரைத்துக் கோடரி கொண்டு வெட்டிய இடத்தில் பூசி, அதன்மேல் மண்ணை அப்பித் தண்ணீரும் பாலும் ஊற்ற வேண்டும்.

108. சர்க்கரை, எள் இரண்டையும் அரைத்துப் பசும்பாலுடனும் தண்ணீருடனும் கலந்து மரத்துக்கு ஊற்றினால் மரத்தின் வாட்டம் நீங்கும். இந்தப் பூச்சாலும் தூபத்தாலும் வாட்டம் நீங்கும்.

109. ஞாழல், தகரை, நீர்வஞ்சி, மருது இவற்றின் பட்டைகளையும் வசம்பையும் சேர்த்து அரைத்துப் பற்றுப் போட்டால் மரத்திலிருந்து நீர் கசிவது நின்றுவிடும்.

பழத்துக்குச் சுவை ஏற்றுதல்

110. சர்க்கரை, அதிமதுரம், வாயுவிளங்கம் இவற்றை அரைத்துப் பாலும் தண்ணீரும் சேர்த்து ஊற்றினுல் வாடிய மரங்கூட நல்ல தித்திப்பு உள்ள பழங்களைக் கொடுக்கும். இதனுல் பழத்துக்குச் சுவை அதிகரிக்கும்.

வாசனையூட்டுதல்

111. நல்ல வாசனையுள்ள பூக்களைச் செடியின் வேரைச் சுற்றிப் புதைத்து மண்ணுல் மூடிவிட வேண்டும். பின்பு, தவம் என்ற மரத்தின் பட்டையையும் காசுக்கட்டியையும் கஷாயமாகக் காய்ச்சி அதோடு பூலாங்கிழங்கு, தவனம், மரு, பெரிய லவங்கப்பட்டை, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், குருவேர், மராட்டி மொக்கு (சோம்பு), ஜாதிபத்திரி, ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களை அரைத்துக் கலக்கிச் செடிக்கு ஊற்ற வேண்டும். சந்தனத்தை அரைத்துச் செடியின் மேல் தடவ வேண்டும். பின்பு நெய்யைத் தூபம் இட்டால், மலர்களுக்கு நல்ல மணம் ஏற்படும்.

பழங்களையும் பூக்களையும் உதிரச் செய்தல்

112. புஷ்பித்த இலவ மரத்தின் வேரில் பெருங்காயத்தைத் தடவினுல் சீக்கிரத்திலேயே பூக்கள் உதிர்ந்துவிடும்.

113. கொள்ளுக் கஷாயத்தை மரத்துக்கு ஊற்றினுல் பூக்களும் பழங்களும் உதிர்ந்துவிடும்.

பெண்களைக் கொண்டு தோகதம் கொடுத்தல்

114-116. அசோக மரம் பெண்கள் உதைப்பதாலும், மகிழமரம் எச்சில் உமிழ்வதாலும், மருதோன்றி ஆலிங்கனம் செய்து கொள்வதாலும், மஞ்சாடி அவர்களுடைய பார்வையாலும், மாமரம் கையால் பரிசித்தலாலும், சண்பகம் முக வாசனையாலும், கோங்கிலவு பேச்சினாலும், நொச்சி மூச்சுக் காற்றினாலும், ப்ரியாலு (சாரைப் பருப்பு மரம்) பாடுவதாலும், புன்னை சிரிப்பொலியாலும் பூத்துக் காய்த்துப் பழுக்கும்.

அங்கோல தைலம்

116 (பிற்பகுதி) – 119. மேல்தோலை உரித்த அழிஞ்சில் விதைகளைப் பொடி செய்து, நல்லெண்ணெயையும் வெந்நீரையும் கலந்து, ஏழு முறை மர்த்தித்துச் செக்கிலிட்டு எண்ணெய் எடுக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால் ஒரு வெண்கலப் பாத்திரத்தில் கலந்த விதை விழுதைத் தடவிச் சாய்த்து வெயிலில் வைத்து அதன் கீழே எண்ணெய் வடிய வேறொரு வெண்கலப் பாத்திரத்தையும் வைத்தால் எண்ணெய் விழுதிலிருந்து உருகிக் கீழே வைத்த பாத்திரத்தில் விழும். இந்த எண்ணெயைக் கொண்டு (விருக்ஷ விசித்திர கரணம்[1] என்னும் பகுதியில் வரும்) பல அதிசயங்களைச் செய்யலாம்.

---

[1] விருக்ஷ விசித்திர கரணம் – விசித்திர முறைகள் என்ற பகுதி.

7. எருவிடுதல்

[தற்கால விஞ்ஞானிகள் எருச் சத்துக்களை, காலகச்சத்து அல்லது நைட்டிரஜன் (Nitrogen), எலும்புச் சத்து (Phosphate), சாம்பல்காரச் சத்து (Potash) என்று கூறுகிருர்கள். இந்த வகைகளை இந்நூல் கூறவில்லை. ஆனல் இங்கே கூறப்படும் எருக்களைப்பற்றி ஆராய்ந்தால் மேலே கூறிய மூன்று சத்துக்களும் இவற்றுள் அடங்கியுள்ளன என்பது ஆராய்ச்சியாளருக்குப் புலப்படும். இந்திரியச் சத்துக்களில் (Nitrogeneous Manures) அதி விரைவில் பலன் தருவது இறைச்சியே. இதனைத் திடப்பொருளாகவும் திரவப் பொருளாகவும் செடிகளுக்குத் தரவேண்டும் என்பதை இந்நூல் மிகுதியாக வற்புறுத்துகிறது. பிண்ணுக்கு வகைகளில் எள்ளுப் பிண்ணுக்கும், வேறு இந்திரிய எருக்களில் கக்கூஸ் குப்பையும், ஆட்டெருவும், தழை உரமும் கூறப்படுகின்றன.

இக்காலத்தில் செயற்கை உரங்களை மிகுதியாக வற்புறுத்துகிருர்கள். அவை விரைவில் வேலை செய்து செடிகளின் வளர்ச்சியையும் பலனளிப்பையும் துரிதப்படுத்துகின்றன. செயற்கை உரங்களில் இன்ன செடிக்கு இது விசேஷ எரு (Special Manure) என்று இக்காலத்தில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள். இக்காலச் செயற்கை உரங்களைப் போன்று விரைவில் பயன் தரும் சில உரங்களை இந்த அத்தியாயம் தனிப்பட்ட சில செடிகளுக்கு வற்புறுத்துகின்றது.

பலா மரத்துக்கு வைக்கோலையும் பாக்கின் இலையையும் கட்டி வைத்தல் எருவிடும் முறைகளில் புதியதாகும்.

எருக்களை இடுவது அல்லாமல் செடிகளுக்குப் புகை போடுதல், அவைகளை எரித்தல் முதலிய முறைகள் பலனளிப்புக்குச் சில சமயங்களில் அவசியம் என்று இந்த அத்தியாயம் கூறுகிறது. இந்த இரு முறைகள், முக்கியமாக இவற்றுள் பின்னது, இக்கால வாடையளிப்பு (Wintering of plants) என்னும் முறைக்குச் சமமானது என்று தோன்றுகிறது.

"சில மரங்களின் வேர்ப்பரப்பு அதிகமாகி மரங்களுக்கு ஆகாரம் அளவுக்குமேல் கிடைக்கப் பெற்று அவை மதர் மதர்ப்புடன் செழித்து வளர்ந்துவிடும். ஆனால் பலன் மட்டும் இராது. இச்சந்தர்ப்பங்களில் மரத்தைப் பட்டினி போட்டு இளைக்கச் செய்ய வேண்டும். இளைக்கச் செய்தலாவது, மரத்துக்கு நீர் பாய்ச்சுவதை அறவே நிறுத்திவிட்டு, அடிமரத்தைச் சுற்றிலும் குழி பறித்து வேர்கள் வெயிலில் காயும்படி பாத்தி மண்ணைப் பறித்து விடவேண்டும். இங்ஙனம் ஐந்து வாரம் வரையிலும் காய்ந்தால் மரம் காயத் தொடங்கி இலைகளை உதிர்த்துவிடும். பிறகு களையத்தக்க கொம்புகளையும், வேர்களிற் சிலவற்றையும் களைந்துவிட்டுப் புதிய மண்ணையும் எருவையும் போட்டுப் பாத்தியை மூடிவிட்டுத் தண்ணீர் பாய்ச்சி வந்தால் மலட்டுச் செடிகளும் நன்றாகப் பலன் தரக்கூடும். இதுதான் வாடை அளிப்பு."]

119 (பிற்பகுதி). ஜாதிப்பூ, மல்லிகைப் பூச் செடிகளுக்குச் சந்தனத்தை அரைத்துத் தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும்.

120. எப்பொழுதும் மலரும் பூச்செடிகளுக்கு ஆமை மாமிசத்தை எருவிட வேண்டும்.

120–121. செவ்வலரி, மருதோன்றி, மாதவி இச்செடிகளுக்கு மாலை வேளையில் கள்ளை ஊற்றினுல் எப்பொழுதும் பூக்கும்.

121–122. வெள்ளாடு, செம்மறியாடு, பசு இவற்றின் எருவைச் செடி கொடிகளுக்குப் போட்டுத் தண்ணீர் ஊற்றினுல் எப்பொழுதும் பூவும் பழமும் நிறைந்து தழைக்கும்.

இனி, மரம், செடி, கொடி முதலியவைகளுக்குப் பொதுவாக எருவிடும் லட்சணம் சொல்லப்படுகிறது.

123. வாயுவிளங்கம், அரிசி, மீன் மாமிசம் இவற்றை அரைத்துப் பசுஞ் சாணத்துடனும் பசு மூத்திரத்துடனும் சேர்த்து மாஞ்செடிகளின் வேரில் ஏழு நாள் தடவித் தண்ணீர் ஊற்றிக்கொண் டிருந்தால் பூவும் பழமும் சமிருத்தியாக உண்டாகும்.

124–125. பார்லி, பயறு, எள், உளுந்து, கொள் இவற்றைச் சேர்த்துக் கஷாயம் வைத்து ஆற்றி மரச் செடிகளுக்கு ஊற்றினுல் நன்ருய்த் தளிர்த்துப் பூத்துக் காய்க்கும்.

126. ஈந்து, தென்னை, மூங்கில், நெற்பயிர் இவைகளுக்கு மாமிச நீரை ஊற்றினுல் செழிப்பாக வளரும்.

127. உளுந்து, பயறு, மருவின் விதை இவற்றைக் கஷாயம் காய்ச்சி, அத்துடன் உப்பும் கள்ளும் சேர்த்துத் தென்ன மரத்துக்கும்

பேரீச்ச மரத்துக்கும் ஊற்றினால் எக்காலத்தி லும் காய்த்துக்கொண் டிருக்கும். (கஷாயத்தை எப்பொழுதும் ஜில்லென்று ஆற வைத்தே ஊற்ற வேண்டும்.)

128–131. பாக்கு இலையைப் பலாமரத்துக் குச் சுற்றினால் நன்றாகப் பலன் கொடுக்கும். நரி, உடும்பு, மான், கன்னிமான், பன்றி இவற்றின் மாமிசத்தையும், ஐங்கொழுந்துகள் எனப்படும் அரசங்கொழுந்து, ஆலங்கொழுந்து, இரளிமரக் கொழுந்து, மாந்தளிர், அத்திக்கொழுந்து இவற் றைச் சேர்த்துக் கொதிக்கவைத்த பால் கஷாயத் தையும் மாமரத்துக்கு ஒரு முறை ஊற்றினால் நிறையக் காய்த்துப் பழுக்கும். பன்றி, நரி, எலி, குதிரை இவற்றின் மாமிசத்தையும் மேலே சொன்ன ஐங்கொழுந்துகளின் கஷாயத்தையும் சேர்த்து மரத்துக்கு ஊற்றினால் நல்ல பலன் கொடுக்கும்.

132–134. மாதுளை மரத்துக்கு ஆட்டு மாமி சத்தைக் கழுவிய நீரை ஊற்றி ஆட்டுமாமிசத் தையும் ஆட்டுமயிரையும் சேர்த்துப் புகையிட் டால் நிறையப் பழங்கள் பழுக்கும். ஆட்டுமாமி சம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவற்றை அரைத்து, நெய்யும் தேனும் சேர்த்து, மாதுளை மரத்தின் அடிப்பாகத்தில் தடவி, மேலே சொன்ன புகைப்பொருள்களால் தூபம் இட்டால் பழம் பனம்பழத்தைப்போல் பெரியன வாகும்.

135—137. கொள்ளை மாவாக்கி, மீனைச் சேர்த்துக் கஷாயம் வைத்து மாதுளை மரத்துக்கு ஊற்றினால் ஏராளமாகப் பழுக்கும். கடாரமரத்துக்கு நரியின் மாமிசத்தையும் வெல்லத்தையும் பாலுடன் கலந்து எருவிட்டு; அந்த மாமிசத்தைக் கழுவிய நீரையும் ஊற்றினால் நல்ல பலன் கொடுக்கும். நாரத்தை, இச்சிலி முதலியவற்றுக்கும் இந்தச் சிகிச்சை செய்யலாம். எந்த மிருகத்தின் மாமிசமாயினும் சரி; இச்சிலி மரத்துக்கு அந்த மாமிசத்தைக் கழுவிய நீரை வெல்லமும் பாலும் கலந்து ஊற்றினால் நல்ல பலனைக் கொடுக்கும். எந்த மிருகத்தின் மாமிசமானாலும் சரி; அல்லது இறந்த மிருகங்களின் உடலையாயினும் சரி, இச்சிலி மரத்தடியில் புதைத்தால் நல்ல பழங்களை ஏராளமாகக் கொடுக்கும். எலுமிச்சை மரத்தைச் சுற்றிலும் பாத்தியை நன்றாக வெட்டி, எள்ளுப் பிண்ணாக்கை எருவிட்டால் நிறையக் காய்கள் காய்க்கும்.

138. தென்ன மரத்துக்கு மரு, பயறு, உளுந்து இவற்றைக் கஷாயம் செய்து ஆற்றி ஊற்றினாலும், அல்லது இவற்றை அரைத்துத் தடவினாலும் இளமைபெற்று நன்றாகக் காய்க்கும்.

139–140. தென்ன மரத்தின் வேருக்கு அடியில் உப்பு, எலும்பு, உமி, மணல் இவற்றைக் கலந்து புதைத்தால் நல்ல பலனைக் கொடுக்கும். ஒவ்வொரு வருஷத்திலும் பாக்கு மரத்துக்கு மழைக் காலத்தில் மலத்தை எருவிட்டால் நல்ல பலனைக் கொடுக்கும்.

141. யானைத் தந்தத் தூளால் காய்ச்சிய இரும்புக் கம்பியால் வாழைமரத்தின் அடிப் பாகத்தில் துளையிட்டால் பெரிய காய்கள் காய்க்கும்.

142. பன்றியின் சாணத்தால் ஆகிய வறட்டி, குதிரைச்சாண வறட்டி இவற்றில் நெருப்பிட்டுக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் வாழை மரத்தின் வேரில் குத்தினால் பெரிய காய்கள் ஏராளமாகக் காய்க்கும்.

143—146. பழைய சாணம், உமி இவற்றை எரித்த சாம்பலை வாழை மரத்துக்கு எருவிட்டுக் காலந்தவறாமல் தண்ணீர் ஊற்றி வந்தால் நல்ல பலன் உண்டாகும். தேனும் அதிமதுரத்தை ஊறவைத்த தண்ணீரும் இலந்தை மரத்துக்கு மிக நன்மை தரும். எள்ளையும் அதிமதுரத்தை யும் சம எடை எடுத்துத் தூள் செய்து, தேனும் தண்ணீரும் கலந்து ஊற்றினால் இலந்தை நன்றாகப் பூத்துக் காய்க்கும். இந்தத் தண்ணீரை ஊற்றுவதால் தித்திப்பும் வாசனையும் உள்ள பெரிய பழங்கள் கிடைக்கும்.

147. எள்ளுப் பிண்ணாக்கு, திப்பிலி, குன்றி மணி, தினை, வெண்கடுகு, வசநாபி, வசம்பு இவற்றையெல்லாம் பொடி செய்து பாலோடு கலந்து சம்பங்கிச் செடிக்கு ஊற்றினால் நன்றாகப் பூக்கும்.

148—150. நரியின் மாமிசம், மீன் இவை யெல்லாம் சம்பங்கிச் செடிக்குச் சிறந்த எரு

என்று தெரிகிறது. மல்லிகைப் புதரைப் புற்களால் எரித்தால் நல்ல புஷ்பங்கள் பூக்கும். முல்லைச் செடிக்கும் இம்முறையைக் கையாளலாம். முயலின் மாமிசக் கஷாயம் ஒரு பங்கும், அதன் சாணத்தூள் ஒரு பங்கும் சேர்த்துத் திராட்சைச் செடிக்கு எருவிட்டால் அளவில் பெரியனவும் தித்திப்பும் உள்ள பழங்கள் உண்டாகும்.

151. பேரீச்சை, வில்வம், எலுமிச்சை ஆகிய மரங்களுக்கு வெண்கடுகு மாவை எருவிடுவதால் செழிக்கும். மாமரத்துக்கு எள்ளுப் பிண்ணுக்கும் உமியும் எருவிட்டு நீர் வார்த்தால் விருத்தியடையும். ஏலக் கொடிக்கு நிசுள இலையை எருவிட்டுத் தண்ணீர் ஊற்றினுல் நன்ருக வளரும்.

152. முற்றிய நெல்லி மரத்துக்கு (எல்லா நெல்லி மரத்துக்குமே) உளுந்து வளர்ச்சி தரும். பாலும் தண்ணீரும் நன்மை செய்யும். பார்லி மாவு (அல்லது அரிசி முதலியவற்றின் மாவு), தவிடு, கழுநீர் இவையெல்லாம் தென்ன மரத்துக்குக் கேடு செய்யும். எந்தவகை மரத்துக்கும் புன்செய் உதவாது.

153–154. மான், பன்றி, யானை, நரி, குதிரை முதலியவற்றின் மேதஸ்ஸால் செய்த கஷாயத்தாலும் பாலாலும் ஐங்கொழுந்துகளின் தண்ணீராலும் மாமரம் வளர்ச்சி பெற்று நல்ல மணமுள்ள பழங்களைத் தரும்.

155. நெய், குணபஜலம், பன்றிச் சாண எரு இவைகளைக் கலந்த தண்ணீர் மாதுளை மரத்

துக்கு நன்மை செய்யும். அல்லது கொள்ளு மாவோ அதன் கஷாயமோ ஊற்றினுலும் மாதுளை எக்காலத்திலும் பலன் தரும்.

156. மாதுளை மரத்துக்குக் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மீன்செதிள் இவற்றைச் சேர்த்து அரைத்துத் தடவித் திரிபலா சூர்ணத்துடன் நெய் சேர்த்துப் புகையிட்டால் பெரிய அளவுள்ள மாம்பழத்தைப் போலும் பனங்காயளவிலும் பழம் பழுக்கும்.

157. தயிர், பாலாடை அல்லது வெண்ணெய், கஞ்சி, சாராயம், இலந்தைப்பழம், எள், வெந்தயம், குணபஜலம், கள் இவற்றைப் பலினி, கடம்பு, நாககேசரம் ஆகிய மரங்களுக்கு எருவிட்டால் நல்ல மணமுள்ள பூக்கள் பூக்கும்.

158. மாமிசத்தையும் மீனையும் கழுவிய நீரையும் கோழி எச்சத்தையும் திராட்சைச் செடிக்கு எருவிட்டால் பூக்கள் ஏராளமாகப் பூத்து நல்ல பழங்கள் பழுக்கும். பலாமரத்தின் அடிப்பாகத்தில் வைக்கோலால் திரித்த கயிற்றைச் சுற்றி, வசம்பு கலந்த தண்ணீரை ஊற்றினுல் மரத்தின் அடியிலிருந்து நுனி வரையில் நல்ல பழங்களைக் கொடுக்கும்.

159. விளாமரத்துக்கும் வில்வ மரத்துக்கும், நெய், வெல்லம், பால், தேன் இவற்றை ஊற்றித் தண்ணீர் வார்த்தால் நல்ல ருசியும் சதைப்பற்றும் உள்ள பெரிய பழங்கள் உண்டாகும்.

160. பீர்க்க இலையும் அதன் கொடியும் கஷாயமும் தண்ணீரும் மாமிச நீரும் இலுப்பை மரத்துக்கு ஊற்றித் திப்பிலித் தூளைப் புகையிட்டால் செழிப்பாக வளரும்.

161. இலந்தை மரத்துக்கு எள்ளும் அதிமதுரமும் சேர்த்துத் தூளாக்கித் தண்ணீருடன் கலந்து ஊற்றினாலும் அல்லது குணபஜலத்தை ஊற்றினாலும் சர்க்கரை போல் இனிக்கும் இலந்தைப் பழங்கள் தோன்றும்.

162. செம்மறியாடு, சண்டை ஆடு, பன்றி, பறவைகள் இவற்றின் மலத்தை எருவிடுவதாலும், குதிரை மூத்திரத்தை ஊற்றுவதாலும் தாதுமாதுளை நிறையப் பழங்களைத் தரும்.

163. தேளைக் கொடுக்கால் கொட்டச்செய்து, நல்ல நெய்யால் புகையிட்டு. எலி, பன்றி இவற்றின் கொழுப்பை எருவிட்டால் எல்லாச் செடி கொடிகளும் பாரந்தாங்காமல் பழுத்துக் குலுங்கும்.

164. கோஷ்டம், பச்சிலை, சாராயம், கோரைக்கிழங்கு, தகரவிதை, வெட்டிவேர் இவற்றின் தூள் எல்லாவற்றையும் தண்ணீருடன் கலந்து ஒரு செடிக்கு ஊற்றினால் அதன் பூக்கள் ஒரு மாத காலம் மணம் வீசும்.

165. வெண்கடுகு, வாழையிலை இவற்றையும் மீன், பன்றி, பூனை இவற்றின் மலத்தையும் ம எடை சேர்த்துப் புகையிட்டால் எல்லா மர வகைகளும் நோய் நீங்கித் தளிர், பூ, காய், பழம் இவற்றால் நிறைந்திருக்கும்.

166. நெய்ப் புகையிட்டு, பார்லியைக் கழுவிய நீரையோ, பால், தண்ணீர், குணபஜலம் இவற்றையோ ஊற்றி வாயுவிளங்கமும் எள்ளும் அரைத்த விழுதைத் தடவினால் எல்லா மரங்களும் செழிக்கும்.

167–168. அழிஞ்சில் இலைக் கஷாயத்தோடு நெய்யும் தேனும் கலந்து மரங்களுக்கு ஊற்றி, பன்றி, மான் இவற்றின் கொழுப்பையோ மாமிசத்தையோ எருவிட்டுத் தண்ணீர் ஊற்றினால் மரங்களில் நினைத்தபடி எப்பொழுதும் பழங்களைப் பெறலாம். நோயின்றி நல்ல இலைகளையும் பூக்களையும் தாங்கிச் செழிக்கும்.

8. விசித்திர முறைகள்

[புதிய சிருஷ்டிகளை உண்டாக்கும் விசித்திர முறைகள் நூல் நெடுகப் பல இடங்களில் காணப் பட்டாலும் இந்தப் பகுதியே அவற்றைச் சிறப் பாகக் கூறுகின்றது. சுலோகம் 205-6 இந்தப் பகுதிக்குப் புறம்பானது. தொகுத்தவரால் தவ ருக இங்கே வைக்கப்பட்டுள்ளது. இதுபோக, சுலோகம் 111–119 இந்தப் பகுதியில் சேர்க்கப் பட்டிருக்கலாம். இந்தப் புத்தகத்தின் அட்டைப் படம் 175 – 6 ஆம் சுலோகத்தின் கருத்தை விளக்கு கிறது. இறுதிச் சுலோகம் மரம் வைத்தலின் பயனைச் சுருக்கமாக மீண்டும் கூறுகிறது.]

169. தாமரை விதைகளின் தூளை அங் கோல தைலத்தில் ஊறவைத்துத் தண்ணீரில் கலந்தால் உடனே தாமரைக் கொடிகள் தோன்றும்.

170. நீலோத்பலம் அல்லது கருங்குவளை விதைகளை மேலே சொன்ன அங்கோல தைலத் தில் நனைத்துத் தண்ணீரில் போட்டால் உடனே கொத்துக் கொத்தாகப் பூக்களும் தோன்றும்.

171. நீரிலும் நிலத்திலும் வளரும் எந்தச் செடிகளின் விதைகளையாவதும் இந்தத் தைலத் தில் ஊறவைத்தால், போட்டவுடனே செடி முளைப்பதைக் காணலாம்.

172–73. எந்த விதைகளையும் அங்கோல தைலத்திலேனும் அங்கோலப் பழத்தின் சாற் றிலேனும் (கல்கத்திலேனும்) ச்லேஷ்மாதக

தைலத்திலேனும் ச்லேஷ்மாதகப் பழச்சாற்றி லேனும் நூறு முறை நனைத்து, ஆலங்கட்டி மழையால் நனைத்த நிலத்தில் நட்டால் உடனே கப்பும் கிளையுமாக மரங்கள் தோன்றும்.

174. குவளைக் கிழங்கை எருமைச் சாணத் திலும் எருமை மூத்திரத்திலும் ஏழு முறை நனைத்து நட்டால் நட்டவுடன் செடி முளைக்கும்.

175–176. பருத்தி விதைகளைப் பசுஞ்சாணத் திலும் சாண ஜலத்திலும் கழுவி நட்டுப் பன் றிக் கொழுப்பும் மாமிசமும் கழுவிய தண்ணீ ரும் ஊற்றி வந்தால் எலுமிச்சை மரம் வளரும்.

177. செம்பரத்தைக்குப் பால் ஊற்றினால், கற்கண்டு போல் வெண்மையான பூக்கள் பூக்கும்.

178. சிவப்புப் பூக்கள் பூக்கும் மரம் செடி களில் வேருக்கு நெய் தடவினால் வெள்ளைப் புஷ்பங்களாகப் பூக்கும். வெள்ளைப் பூப்பூக்கும் செடிகளின் வேருக்குத் தேனைத் தடவி வந்தால் சிவப்பு நிறப் பூக்கள் பூக்கும். எல்லாப் பூச் செடிகளுக்கும் இப்படிச் செய்யலாம்.

179–80. பவழமல்லிகை மரத்தின் வேரில் துளைசெய்து அதில் மல்லிகைக் கொடியை நுழைத்து மண்ணால் மூடிவைத்து விடவேண் டும். அவை இரண்டும் ஒன்றாகி விட்டபின் மல்லிகையின் வேரைக் கத்தரித்து விடவேண் டும். இதன் பின் பூக்கள் எல்லாம் சிவப்பு நிற

மும் நல்ல வாசனையும் கொண்டு மனோகரமாய் இருக்கும்.

181. எந்த நிறத்தில் பூக்கும் செடிகளுக்காயினும் நாம் எந்த நிறம் உடைய தண்ணீர் ஊற்றுகிறோமோ அந்த நிறத்தில் பூக்கள் பூக்கும்.

182. வெள்ளெருக்குப் பூக்கள் பூக்கும் செடியை எறும்புகள் நிறைந்த நிலத்தில் நட்டால் சிவப்புப் பூக்கள் பூக்கும்.

183. கத்திரி விதைகளைத் தேனாலும் நெய்யாலும் மர்த்தித்துச் சாண எரு நன்றாகப் போட்டு நட்டால் பூசனிக்காய் போன்ற பெரிய பெரிய காய்கள் காய்க்கும்.

184–5. மரத்திலேயே காய்ந்த முருங்கைக் காய் ஒன்றை எடுத்து, அதனுள் இருக்கும் விதைகள் சிலவற்றை மட்டும் எடுத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பாகல் விதைகளை நிரப்பிக் காயை மறுபடியும் சரியாகக் கயிற்றால் கட்டி மூடி, நிலத்தில் புதைத்துத் தண்ணீர் ஊற்றினால், இரண்டு ஜாதிக் காய்களும் காய்க்கும் மரம் தோன்றும்.

186. பச்சையாய் இருக்கும் குவளைக் கிழங்கைக் கொண்டுவந்து, அதன் அடியில் நமக்கு விருப்பமான வர்ணத்தைத் தடவித் தேன், நெய் இரண்டையும் தடவி நட்டால், நாம் தடவிய நிறத்திலே பூக்கள் பூக்கும்.

187–88. நாம் விரும்பிய ஏதாவது ஒருவகை விதையை எடுத்துத் தினந்தோறும் பாலில் ஊற

வைத்து, மறுபடியும் வெயிலில் காயவைக்க வேண்டும். இப்படிப் பத்து நாட்கள் செய்த பின் கொஞ்சம் நெய் தடவி மறுபடியும் பாலில் நனைத்துப் பிறகு பசுஞ் சாணத்துடன் பிசைந்து வேறு சட்டிக்கு மாற்றி, பன்றி, மான் இவற்றின் மாமிசத்தைப் புகையிடவேண்டும். பின்பு ஆடு பன்றி இவற்றின் கொழுப்பினுல் அவ் விதைகளைப் பிசைந்து பூமியில் நட்டுப் பாலும் தண்ணீரும் கலந்து ஊற்றி வந்தால், செடி முளைக்கும் போதே மொட்டுக்களுடன் தோன்றிப் பூக்கும்.

189. பார்லி, எள், மஞ்சள் இலை இவற்றைப் பருத்திச் செடிக்குப் போட்டுத் தண்ணீர் வார்த்தால் சிவப்பு நிறமுள்ள பருத்தி கிடைக்கும்.

190. இலவம் பட்டை, மஞ்சள், அவுரி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், கோஷ்டம், சாராயம் இவற்றையெல்லாம் சேர்த்து அரைத்துப் பருத்திச் செடிக்குத் தடவினுல், கிளிப்பச்சை நிறத்தில் பருத்தி கிடைக்கும்.

191. மஞ்சிஷ்டை, எள், பார்லி, புளியங் கொட்டை, சீந்தில் இலை, மனேசிலை இவற்றைப் பருத்திச் செடிக்கு எருவிட்டுப் பசு, செம்மறியாடு, வெள்ளாடு இவற்றின் பாலை ஊற்றி வந்தால் ஆகாயம் போன்ற கரும் பஞ்சு கிடைக்கும்.

192. பக்குவமாகக் காய்ச்சிய கருப்பஞ் சாற்றை முதலில் செடியின் வேரில் ஊற்றி,

மண்ணால் மூடிப் பின்பு காய்ச்சாத கருப்பஞ் சாற்றை ஊற்றினால் அகாலத்திலும் பூத்துக் காய்க்கும்.

193. எள், கழுநீர், வாயுவிளங்கம், சாணம் இவற்றையெல்லாம் மரத்தின் வேரை யொட்டிப் போட்டுக் கருப்பஞ் சாற்றை ஊற்றினால் அந்த மரம் அகாலத்தில் பூத்துப் பழுக்கும்.

194. தேன், அதிமதுரம், எள், கோஷ்டம், இலுப்பைப்பூ இவற்றையெல்லாம் கொழுக் கட்டையாகவோ, அல்லது அரைத்து விழு தாகவோ செய்து மரத்தின் வேரில் வைத்து மண்ணை மூடினால், கொட்டை இல்லாத பழம் பழுக்கும்.

195. இலுப்பைப்பூ, குன்றிமணி, சர்க்கரை, அத்திக்காய், நெய், தேன் இவற்றை யெல்லாம் சேர்த்து மரத்தில் துளையிட்டு அந்தத் துளையில் இந்தப் பொருள்களை வைத்து நன்றாக மூடி, மீன் எச்சத்தால் மெழுகி, தித்திப்பான தண் ணீரை வார்த்து வந்தால் கொட்டை இல்லா மல் பழம் பழுக்கும்.

196. அப்பொழுது கொன்ற வெள்ளாட்டுத் தோலைத் (துடைப் பக்கத் தோல்) மரத்தின் அடிப்புறத்தில் சுற்றி வைத்தால் மரத்தில் காய்த்த காய்கள் பழுக்காமல் அப்படியே நின்று விடும்.

197. தோலையாவது வைக்கோற்புரியையா வது மரத்தைச் சுற்றிக் கட்டி, வாயுவிளங்கம், தேன், அதிமதுரம், பால் இவற்றைச் சேர்த்து

அரைத்த விழுதை வேரில் தடவி, பாலும் தண்ணீரும் கலந்து ஊற்றி வந்தால் வெகுநாள் வரைக்கும் மரத்தில் இருக்கும் பழங்கள்கூட உதிராமல் இருக்கும்.

198. மீன், பன்றி இவற்றின் கொழுப்பு, கொத்துக் கடலை, உப்பு இவற்றில் எந்த விதையையாயினும் சரி, ஊறவைத்து நட்டால், செடி சீக்கிரத்தில் பூத்துக் காய்க்கும்.

199. கொள்ளுக் கஷாயம், புரசு, மருது, தகரை என்னும் இவற்றின் இலைக் கஷாயம், உப்புநீர் இம்மூன்றையும் மரங்களுக்கு ஊற்றினுல் உடனே பூக்களும் காய்களும் உதிர்ந்து விடும்

200. எருமைச் சாணத்தையும் எருமை மூத்திரத்தையும் கலந்து அதில் குவளை விதையை ஏழு நாள் பிசிறி வைத்து நட்டால் அரளிச்செடி முளைக்கும்.

201. பூசனி, கத்திரி, புடல் முதலியவற்றின் விதைகளை வசம்புத் தண்ணீரில் ஊறவைத்து நட்டு, வசம்பு நீரையே ஊற்றி வந்தால், விதை இல்லாத பெரிய காய்களை எப்பொழுதும் பெறலாம்.

202. கத்திரி விதைகளை நெய்யாலும் தேனுலும் பிசிறி, வெயிலில் காயவைத்துச் செங்காயாக இருக்கும் பூசனிக்காய்க்குப் பசுஞ் சாணம் தடவிப் பிறகு அதில் சிறு துளையிட்டு அதன் வழியாக மேலே சொன்ன கத்திரி விதைகளைப் புகுத்தி நன்ருகப் பசுஞ் சாணத்தால்

மூடிப் பூசனி பழுத்தபின் உள்ளே இருக்கும் கத்திரி விதைகளை எடுத்து நட்டால் நிறையக் காய்க்கும்.

203. முயல், ஆமை இவற்றின் ரத்தத்தில் பல முறை மாங்கொட்டையை நனைத்து வைத்துப் பின்பு நட்டுப் பால் ஊற்றி வந்தால் எக்காலத்திலும் பழம் பழுத்துக்கொண் டிருக்கும்.

204. வாயு விளங்கம், அதிமதுரம், தேன், வெல்லம், பால் எல்லாம் சேர்த்து அரைத்து இயற்கையாகக் கசப்புள்ள தான்றி மரத்தின் வேரில் தடவிப் பாலும் தண்ணீரும் கலந்து ஊற்றி வந்தால், தித்திப்பான பழங்கள் பழுக்கும்.

205–6. தோட்டத்திலுள்ள வாழைமரம் முதல் முதலாகக் கிழக்கில் குலை போட்டால் சுபம். தென்கிழக்கில் போட்டால் எதிரிகளின் முன்னேற்றம். தெற்கே போட்டால் உற்றார் உறவினர் அழிவு. தென்மேற்கில் போட்டால் புத்திரப்பேறு. மேற்கே ஆபத்து. வடமேற்கில் கண்நோய். வடக்கில் சம்பத்து. வடகிழக்கில் போட்டால் ஐசுவரியமும் தோட்டத்துக்கு அபிவிருத்தியும் ஏற்படும்.

207. இந்தச் சாஸ்திரத்தில் உள்ள முறைகளை யெல்லாம் மனிதன் தெரிந்துகொண்டு, தர்ம அர்த்த காம மோட்சங்களுக்கு மரங்கள் சாதனமாகையால் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

முற்றும்

9. பொருள் அகராதி

(எண்—பக்கம் என்று குறிக்காத இடங்கள் பத்தி எண்களைக் குறிக்கும்.)

10. ஆராய்ச்சிக் குறிப்பு

நிலப் பிரிவுகள்

அந்த அந்தப் பிரதேசத்தின் இயல்புக்கு ஏற்ப மரம், செடி, கொடிகள் வேறுபடுகின்றன. ஐரோப்பிய அறிஞர் ஒருவர் பாரத பூமியில் மரம் வளரும் பிரதேசங்களை ஆறு பிராந்தியங்களாகக் கூறியுள்ளார். அவை காச்மீரம், இமயமலை, கங்கைச் சமவெளி, வடஇந்தியாவின் மேல்பாகமாகிய வறண்ட பிரதேசம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பிரதேசம், தட்சிணம் என்பவை. வடமொழியாரின் பிரிவுகள் ஜாங்கலம், அநூபம், சாதாரணம் என மூன்றாகும். இவற்றுள் ஜாங்கலி என்பது மணலும் கற்களும் குன்றுகளும் மிகுந்த வறண்ட நிலம். முள் மரங்களையுடையது. மழை குறைவான இடம். அநூபம் என்பது செழிப்புள்ள மருத நிலம். சாதாரணம் என்பது மேலே உள்ள இரண்டிற்கும் நடுத்தரமானது. தமிழர் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என நிலங்களை ஐந்தாகக் கூறுவர்.

மண்ணின் தன்மை

தற்கால விஞ்ஞானிகள் மணல் நிலம், களி நிலம், சுக்கான் நிலம், இவைகளின் கலப்பினால் பெயர் பெற்றவை என நிலங்களைப் பிரிப்பர். வடமொழி அறிஞரில் சிலர் நிறம் பற்றியும் சுவை பற்றியும் மண்ணை ஆறாகப் பிரிப்பர். கருமை, சாம்பல், நீலம், செம்மை, வெண்மை, பொன்மை என நிறம் பற்றி மண் ஆறு வகைப்படும். இவை முறையே இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு (கஷாயம்) என்னும் சுவைகளைப் பெறும்.

இனப் பெருக்கம்

தற்காலத் தாவர விஞ்ஞானிகள் கூறும் இனப் பெருக்க முறைகள் எல்லாம் பழைய சாஸ்திரங் களில் உள்ளன. 1. பீஜ பீஜம்-விதைகள், 2. காண்ட பீஜம் — பதியங்கள் (Cuttings), 3. மூலபீஜம்— வேர்கள், 4. கந்த பீஜம்—கிழங்குகள் (Tubers), 5. அக்ரபீஜம்—இலைகள் (Runners), 6. பலுபீஜம்— கணுக்கள் (Eyes), 7. அர்க்கபீஜம்—குருத்தொட்டு (Buddings) என்பன வடமொழி நூல்களின் இனப் பெருக்கப் பிரிவுகள்.

தாவரங்களின் பிரிவுகள்

வடநூலாரின் தாவரப் பிரிவுகள் பின்வருமாறு: 1. வனஸ்பதி—பூவாமல் காய்ப்பவை, 2. வனஸ் பத்யா—பூத்துக் காய்ப்பவை, 3. ஒஷதி—ஒருமுறை பலன் தந்ததும் அழியும் தானியப் பயிர்கள், பருப்பு வகைச் செடிகள் முதலியன, 4. வீருத—புதர்ச் செடிகள்; இந்நூலில் கூறப்படும் குல்மம், லதா (நிலம் படர் கொடிகள்) என்பனவும். ரிக்வேதத் திலும் இந்தப் பெயர்கள் காணப்படுகின்றன.

மரவரிசை வகை

மரங்களை நடும்போது முக்கோண முறை, சதுர முறை என இரு முறைகளைத் தற்கால அறிஞர்கள் கூறுவர். நம் பழைய சாஸ்திரங்கள் பின்வரும் வடிவங்களில் எல்லாம் நடலாம் என்று கூறுகின்றன. மண்டபம், நந்தியாவர்த்தம், ஸ்வஸ் திகம், சதுரச்ரம், சர்வதோபத்திரம், வீதி, நிகுஞ் சம் என்பன அந்த வடிவங்கள்.

சில மரங்களைப்பற்றி அறிஞர் கருத்து

வீடுகளுக்கும் வீட்டுத் தோட்டங்களுக்கும் வாழை தகாது என்று இந்நூல் கூறுகிறது. (பிரிவு 18, 27.) சில நூல்கள் வாழையை விலக்க வில்லை. "நாவல், மாதுளை, வாழை, மா இவைகளை வீட்டின் எந்தப் பக்கத்தில் வைத்தாலும் வீட்டு எஜமான் பாக்கியவான் ஆகிறான்" என்று பிரம்ம வைவர்த்த புராணமும், "வீடுகளில் வாழை, பாக்கி யத்தை அளித்துச் செல்வத்தை விருத்தி செய்யும்" என்று மச்ச புராணமும் கூறுகின்றன.

ஆலமரம் வீட்டுத் தோட்டங்களுக்கு ஏற்றது என்று இந்த நூலும் (பிரிவு - 12—3), வீட்டுத் தோட்டத்தின் கிழக்கில் ஆலமரத்தை வைப்பதை இந்த நூலே அன்றி அக்கினி புராணம், மச்ச புராணம், பிருஹத்சம்ஹிதை முதலியனவும் ஆத ரிக்கின்றன. ஆனால், "ஆலமரத்தை வீட்டையடுத்த தோட்டத்தில் வைத்தால் திருடர் பயம் ஏற்படும்; அதனால் வளர்க்கக் கூடாது" என்று பிரம்ம வைவர்த்த புராணம் கூறுகிறது.

இப்படிப்பட்ட அரிய செய்திகள் பல, வட மொழி நூல்களில் உள்ளன.